Registered as a news paper.

பக்கங்கள்: பதின்னான்கு

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 கார்த்திகை 09 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 11 (24.11.2004) புதன்கிழமை இதழ்:55

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247

(c-2203)

அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு

# ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை எதிர்க்கட்சி அடியோடு நிராகரிப்பு!



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் கட்சிக்கு இழுத்து அரசியலமைப்பில் மாற்றம் செய்து, தனது பதவிக் காலத்தை நீடிக்கச்செய்யும் முயற்சியில் ஜனாதிபதி சந்திரிகா இறங்கியுள்ள நிலையில் சமாதான முயற்சிகள் உள்ளிட்ட விடயங்களில் அரசாங்கத்துக்கு ஒருபோதும் ஆதரவளிப்பதில்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சு நடத்தப்பட்டால், அதற்கு ஆதரவு வழங்கத்தயார் என்று அறிவித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி மேலும் சில விடயங்களில் அரசாங்கத்துடன் இரண்டு மூன்று வருடங் (14 ஆம் பக்கம் பார்க்க)



புலனாய்வுப் பிரிவினர் மீது

## துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இரு தமிழ் இளைஞர்கள் கைது!

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டத்திலுள்ள மன்னம்பிட்டியில் நேற்றுமாலை இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இரண்டு படையினரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து நடத்தப்பட்ட தேடுதலின்போது இரண்டு தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்திருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வளைப்பை படையினரும், பொலிஸாரும் மேற்கொண்டனர்.

இதன்போது இனியவன் எனப்படும் செல்வராசா நிமலராஜ் (வயது -18) கனுவங்கேணி, சிவானந்தன்(பன்னிப்பிட்டிய) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டனர்.

இருவரையும் பொலனறுவப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.

நாடாளுமன்ற வீதியில்

## நான்கு இளைஞர்கள் துப்பாக்கிகளுடன் கைது!

(கொழும்பு)

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதிக்குச் செல்லும் பாதையில் வைத்து நேற்றுக்காலை நான்கு இளைஞர்களைக் கைத்துப்பாக்கியுடன் பொலிஸார் கைதுசெய்திருப்பதாக மேல்மாகாண தென்பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஜி.பத்திரன தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் வீதியில் - ராஜகிரிய, வெலிக்கடைச் சந்தியில் நேற்றுக்காலை 11.30 மணியளவில் பஜிரோ இன்ரகூலர் வாகனத்துடன் நான்கு இளைஞர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த இரண்டு இளைஞரும், திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரும் மற்றொரு சிங்கள இளைஞருமே கைதுசெய்யப்பட்டனர்.

பாரிய யுத்தம் ஒன்றுக்கு

நேற்றுமாலை 5 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

வெலிக்கந்த இராணுவ முகாமில் கடமையாற்றும் இரண்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பொலனறுவைக்குச் சென்றுவிட்டு தனியார் வாகனம் ஒன்றில் திரும்பிக்கொண்டிருந்தனர்.

வெலிக்கந்த - பொலனறுவ பகுதியில் வந்துகொண்டிலுந்த இவர்களின் வாகனம் மீது திடீரென வீதியோரத்திலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எந்தக் காயமுமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

இதன் பின்னர் தாக்குதல் நடத்தியவர்களைத் தேடி அந்தப் பகுதியில் சுற்றி

# பாரிய யுத்தம் ஒன்றுக்கு ராணுவம் தயாராகிறது!

## சிவநாதன் கிஷோர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

வரவு - செலவுத் திட்டத்தில் அரசாங்கம் பாதுகாப்புக்காக பாரிய நிதியை ஒதுக்கியிருக்கும் அதேவேளை, வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பாரிய யுத்தம் ஒன்றுக்கான தயாா் படுத்தலில் இராணுவம் ஈடுபட்டு வருவதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது -

தமிழர் பகுதிகளில் படைத் தரப்பினர் மீண்டும் கண்ணிவெடிகளை புதைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் தமிழ் மக்கள் தமது இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குச் செல்லவேண்டியுள்ளது. அது தமிழீழமாகவே இருக்கும்.

வடக்கு - கிழக்கில் இராணுவ நடவடிக்கை காரணமாக சுமார் 45 ஆயிரம் பேர் கணவன் மாரை இழந்தவர்களாகவும், அவயவங்களை இழந்தவர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

சுமார் 30 ஆயிரம் குடும்பங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ளார்கள்.

வடக்கு - கிழக்கில் பல தொழிற்சாலைகள் இருக்கின்ற போதும், அவற்றை உரிய முறையில் இயக்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் போதிய நிதி ஒதுக்கப்படவில்லை.

(14 ஆம் பக்கம் பார்க்க)

மாவீரர் நாள் எமது தேசத்தின் துக்க தினம் அல்ல
நாம் கண்ணீர் சிந்திக் கவலை கொள்ளும் சோக தினம் அல்ல
இன்றைய நாள் ஒரு தேசிய எழுச்சி தினம்
எமது தேசம் சுதந்திரம் வேண்டி உறுதி பூணும் புரட்சி தினம்.



\- மேதகு.வே.பிரபாகரன் - தமிழீழ தேசியத் தலைவர்

## மல்லாகம் இளைஞர் கொழும்பில் கைது!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக வாயிலில் வைத்து சந்தேகத்தின் பேரில் மல்லாகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடற்படையினர் கைது செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 1 மணியளவில் இங்குறுகட வீதித் தடையில் வைத்து, காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த பி.மோகனவர்த்தன் என்ற 22 வயது இளைஞர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

அந்தப்பகுதியில் நடமாடியதற்கான உரிய காரணத்தைத் தெரிவிக்காத காரணத்தினால், கடற்படையினர் இவரைக் கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இரண்டு இளைஞரும், திருகோணமலையைச் சேர்ந்த ஒருவரும் மற்றொரு சிங்கள இளைஞருமே கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து இலங்கையில் சட்டரீதியாகப் பயன்படுத்தப்படாத அதிநவீன ரகத்தைச் சேர்ந்த சீனத் தயாரிப்பான 7.62 கலிபர் மைக்ரோ பிஸ்டல்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டன.

மஜெஸ்ரிக் சிற்றியில் சந்தித்துக் கொண்ட பின்னரே இந்த இளைஞர்கள் நால்வரும் பஜிரோ இன்ரகூலரில் நாடாளுமன்றத்துக்கான வீதியில் பயணம்செய்து கொண்டிருந்ததாகவும், பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இவர்கள் பயணம் செய்த பஜிரோ இன்ரகூலர் வாகனம் தெஹிவளையில் வாடகைக்கு அமர்த்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (01)

## வரலாறு தந்த வல்லமை ஒலிப்பேழை வெளியீடு

(கிளிநொச்சி)

மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைவாணர் கண்ணனின் இசையமைப்பில் உருவான 'வரலாறு தந்த வல்லமை' ஒலிப்பேழை வெளியீட்டு விழா நாளை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொதுச் சுடர் ஏற்றல் நிகழ்வுடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வில், தேசியக் கொடி ஏற்றல், அகவணக்கம், தலைமையுரை, வெளியீட்டுரை, வெளியீடு, சிறப்புரை, கலைஞர் கௌரவிப்பு ஆகியவை இடம்பெறவுள்ளது.

# பருத்தித்துறை பிரதேசசபை

## கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விபரிக்கப்பட்ட 1 தொடக்கம் 02 வரையான வேலைகளை நிறைவேற்றுவதற்கு, இக்ராட்டில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் இவ்வேலையை நிறைவேற்றுவதற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. படிவ விநியோகம் : 01.12.2004 பிற்பகல் 3.00 மணிவரை
2. படிவம் ஏற்றல் : 02.12.2004 நண்பகல் 12.00 மணிவரை
3. படிவம் திறத்தல் : 02.12.2004 பிற்பகல் 2.00 மணிக்கு

| வேலை விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|
| 1. ஆலடி வீதி | 6250/- | 300/- | 45/ - |
| 2. மயில் ஐயர் வீதி | 1050/- | 300/- | 45/ - |

கேள்விகள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு மூலப்பிரதி 'செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி' என்ற முகவரிக்கும், இணைப்பிரதி 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம' என்ற முகவரிக்கும், பதிவஞ்சல் மூலமோ அல்லது நேரடியாகச் சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ படிவமேற்றல் திகதி, நேரத்துக்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச்சபையின் முடிவே இறுதியானதாகும்.

**மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.**

பருத்தித்துறை பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
புலோலி.
22.11.2004.

சிதம்பரப்பிள்ளை பசுபதி,
செயலாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை
புலோலி.

# வெண்மை வாணிபர்களின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு!

யாழ்.மாவட்ட வெண்மை வாணிபர் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மாவீரர்களின் பெற்றோர்கள், உருத்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

வெண்மை வாணிபர் சங்கங்களின் ஒன்றியத்தின் செயலாளர் இ. இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் - ஆரம்ப நிகழ்வாக மாவீரர்களின் பெற்றோர்கள் யாழ்.சத்திரச் சந்தியிலிருந்து மங்கள வாத்தியங்கள் முழங்க, யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வில் பொதுச்சுடரை யாழ். மாவட்ட பொதுச் சங்கங்களின் பொறுப்பாளர் இ.இமையவன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ம. செழியன் ஏற்றினார். ஈகைச் சுடரை பிரமுகர் ஆர்.தர்மன் ஏற்றினார்.

அரச அறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் கனகலிங்கம், நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள், தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்டச் செயலாளர் சொலமன் சிறில் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

மாவீரர்களின் பெற்றோர்களுக்கும், உருத்துடையோருக்கும் மாவீரர்களின் நினைவாக தென்னைமரக் கன்றுகள் வழங்கப்பட்டதுடன், அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்பட்டன.

# பருத்தித்துறை தபால் கந்தோரில் பொதுசன உதவு கொடுப்பனவு!

தெல்லிப்பளை பிரதேச பிரிவிலிருந்து பருத்தித்துறை தபால் நிலையத்தில் பொதுசனமாதாந்த கொடுப்பனவு மற்றும் கசநோய், புற்றுநோய் ஆகியவற்றுக்கான நவம்பர் டிசம்பர் மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

முன்னர் நவம்பர் மாதக் கொடுப்பனவுகளை பெற்றவர்களுக்கு டிசம்பர் மாதக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை தபாலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை - பருத்தித்துறை, சாவகச்சேரி பிரதேச செயலகங்களிலிருந்து உதவிக்கொடுப்பனவுகளை பெற்றவர்களுக்கான நவம்பர் டிசம்பர் மாதக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுகிறது.

# பயிற்சிப் பட்டதாரிகளை அரச அதிபர் சந்தித்தார்!

அரச சேவையில் உள்நுழையும் பட்டதாரிகளுக்கான பயிற்சி நெறியில் கலந்துகொண்டு பயிற்சி பெறுகின்ற கோப்பாய், தெல்லிப்பழை பிரதேச பட்டதாரிகளை நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அரச அதிபர் செ. பத்மநாதன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பயிற்சிபெறும் பட்டதாரிகளுடனான இந்தச் சந்திப்பில் பயிற்சி பெறும் பட்டதாரிகளின் குறைகளை நேரடியாக அரச அதிபர் கேட்டறிந்தார்.

இனிவருங்காலங்களில் இவ்வாறான பயிற்சி நெறிகளில் களையப்படவேண்டிய குறைபாடுகள் தொடர்பாகவும் அவர் கேட்டறிந்ததுடன், பட்டதாரிகளின் குறைபாடுகள் தொடர்பாக கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

இந்தச் சந்திப்பில் அரச அதிபருடன் பட்டதாரிகள் பயிற்சி நிலையங்களின் இணைப்பாளர்களும் உடனிருந்தனர். அத்துடன் ஏனைய பயிற்சி நிலையங்களுக்கும் அரச அதிபர் நேரடியாகச் சென்று குறைகளைக் கேட்டறிவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (12)

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவையினர் நடாத்தும் மாவீரர்களின் பெற்றோர் உருத்துடையோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய நடராசா மண்டபத்தில் காரைநகர் பிரதேச பொறுப்பாளர் கானகன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தேசிய எழுச்சிப்பேரவையினர் கேட்டுள்ளனர்.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றும் நிகழ்வு இன்று கொக்குவில் பிரதேசத்தில் இடம்பெறும்.

இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கொக்குவில் மேற்கு காந்திஜி சனசமூக நிலையத்திலும், மதியம் 1.30 மணி முதல் மாலை 3 மணிவரை கொக்குவில் பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்திலும் இடம்பெறும் என நல்லூர் பிரதேசசபை செயலாளர் தெரிவித்தார்.

## ஆன்மீக சொற்பொழிவு

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லூர் கந்தசுவாமி ஆலய நாவலர் மணி மண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் சைவப் புலவர் கந்த சத்தியதாசன் 'காவியக் கமலக் கழலுடன் சேர்த்தென்னைக் காத்தருள்வாய்' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 11 - 1949

உதிர்வு 17 - 11 - 1994

அமரர்

**சிவகுரு நவரத்தினம்**

(உரிமையாளர், கனகா பத்திரிகை விற்பனை அகம், திருநெல்வேலி)

திதி: 24.11.2004

நீங்கள் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆனாலும்
தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு நீங்கா உங்கள் ஆத்மா சாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
கனக இல்லம்,
கைதடி கிழக்கு, கைதடி.

தற்காலிக முகவரி:
இல:37, பலாலி வீதி,
திருநெல்வேலி.

உங்கள் பிரிவால் துன்புறும்:
மனைவி, மக்கள், உற்றார்,
உறவினர்கள்.

(C/3397)


**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.
2 வது வெற்றிவாரம் (குளிரூட்டப்பட்டது)
தனுஷ், பிரியா நடித்த
பரீக்ஸ் (ரீல்ஸ்)
வெகுவிரைவில் : இரவு 9.00 (பு.நே) காட்சியாக
RAMBO - 3
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே)
(ச-3319)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அஜித் இருவேடங்களில், பூஜா நடித்த

அட்டகாசம்
பு.நே 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

**நாகம்ஸ்** சுன்னாகம்
இந்தியாவிலும் - இலங்கையிலும் ஒரேதின வெளியீடான
R.B.சௌத்ரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சத்ரபதி (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)

**நிரஞ்சனாஸ்** சங்கானை
அஜித், சிநேகா நடித்த
ஜனா (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
RAMBO - 3
(ச-2723)

# தமிழரைப் பாதுகாக்க வெள்ளவத்தையில் புலிகள் முகாம் அமைப்பதற்கு அனுமதிப்பீர்களா?

## அரசிடம் கேள்வி எழுப்புகிறார் ஈழவேந்தன்



(கொழும்பு)

வடக்கில் பொதுமக்களின் குடியிருப்புகளை ஆக்கிரமித்து, தமது படைநிலைகளை சட்டவிரோதமாக அமைத்துக்கொண்டு, பொதுமக்களைப் பாதுகாப்பதாக நியாயம் கற்பிக்கிறது இராணுவம். அப்படியானால், தலைநகர் கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தையில் தமிழர்களைப் பாதுகாக்கவெனப் புலிகள் முகாம் அமைத்தால் எப்படியிருக்கும் என்று கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான மா.க.ஈழவேந்தன்.

நாடாளுமன்றில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தமுறை மாவீரர் தினத்தில் தலைவர் பிரபாகரன் ஆற்றப்போகும் உரை, இந்த நாட்டின் வரலாற்றில் திருப்புமுனையாக அமையப் போகிறது.

சமஷ்டி அமைப்பின்கீழ், தமிழ் மக்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்குச் சிங்கள அரசு இனியும் இணங்காவிட்டால், நாம் நண்பர்களாகவே பிரிவதற்கு ஆயத்தமாகிவிட்டோம். அதன் பின்னர் தமிழீழத் தனியரசு தவிர்க்க முடியாததாகும்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற போர்வையில், தமிழ் மக்கள் மீது ஏதாவது திணிப்பு முயற்சிகள் அரசு மேற்கொண்டால், அது இந்த நாட்டுக்குப் படுபயங்கரமான பாதக நிலையை ஏற்படுத்தும்.

நாட்டின் பாதுகாப்புச் செலவினத்தை அதிகரித்துச் செல்லும் அரசாங்கம் - அமைதி முயற்சிகள், சமாதானம் பற்றியெல்லாம் பேசும் என்று எப்படி எதிரபார்ப்பது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# ஜனாதிபதி சந்திரிகா ஈரானுக்கு விஜயம்!

(கொழும்பு)



ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான குழுவொன்று இன்று ஈரானுக்குப் பயணமாகவுள்ளது.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் ஜாலிய மெதகம ஆகியோரும் ஈரானுக்குச் செல்லவுள்ளனர்.

ஈரானில் தங்கியிருக்கும் காலத்தில், ஜனாதிபதி சந்திரிகா, ஈரானிய ஜனாதிபதி மொகமட் கத்தாமி உட்படப் பல சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.

# வீதி விபத்தில் போராளி சாவு!

மட்டக்களப்பு கொத்தியாவளையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வீதி விபத்தொன்றில், லெப்டினன்ட் மலைஜெகன் எனப்படும் சத்தியநாதன் இன்பராஜா என்ற போராளி வீரச்சாவடைந்தாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது.

இவரது வித்துடல் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டு அவரது சொந்த இடமான பழுகாமத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

நேற்று தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டதென விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.



மாவீரர் தினத்தையொட்டி நிலாவெளிப் பிரதேச மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கோபாலபுரம் பாடசாலை மாணவி சாருஜாவுக்கு விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணக் கடற் புலிகளின் தளபதி சிறிராம் பரிசில் வழங்கி வழங்குவதைக் காணலாம்.

*படம் சசிக்குமார்*

# நீதிபதியை கொலை செய்யுமளவுக்கு நீதித்துறை சீர்குலைந்துள்ளது

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

அதியுயர் அதிகாரம் கொண்ட நீதிபதியொருவர் படுகொலை செய்யப்பட்டமை நாட்டில் நீதித்துறை பெருமளவு சீர்குலைந்து விட்டதன் வெளிப்பாடு என, பிரதம நீதியரசர் சரத் என்.டி.சில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய படுகொலை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர், இந்தக் கொலை தனிப்பட்ட ஒரு நபருக்கு ஏற்பட்ட பாதிப்பு அல்ல, அனைத்து நீதித்துறையும் எதிர்நோக்கி வருகின்ற சவால்களின் வெளிப்பாடாகும். இந்த நிலையில் சட்டத்தை நிலைநாட்ட சகல பிரிவினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

பல காலமாக இடம்பெற்று வரும் தொடர் குற்றச் சம்பவங்களின் விளைவே நீதிபதியின் கொலையாகும். இந்தக் குற்றச் செயல்களைப் பொலிஸார் விசாரிக்க வேண்டும்.

பாதாள உலகக்குழு தற்போது பாரிய அளவுக்குப் பலம் பெற்றுள்ளது. அந்தப் பலம் உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொல்லும் அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளது.

நீதிமன்றத்தை விமர்சிப்பது தற்போது வாடிக்கையாகிவிட்டது. நீதித்துறைக்குப் பல்வேறு தரப்பும் சவால் விடுகின்றது. நீதிமன்றம் அவமதிக்கப்பட்டு வருகிறது.

இப்படியான சூழ்நிலையில் நீதிபதியை ஏன் கொல்ல முடியாது எனப் பாதாள் உலகக் குழு நினைக்கலாம் தானே? என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் நீதிபதிகளும், நீதிமன்றமும் எதிர்நோக்கும் அச்சுறுத்தல் பற்றி ஆராய்வதற்குக் கட்சித்தலைவர்களின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டுமாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரைக் கேட்டுள்ளார்.

நீதிமன்றம் தொடர்பான அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இருப்பதால் இது பற்றி ஆராய வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், பாதாள உலக குழுவின் அச்சுறுத்தல் நீதிமன்ற அலுவல்களை ஸ்தம்பிதமடையச் செய்யும் என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஒவ்வொரு மாவீரனினதும் தியாகங்கள் தமிழீழ வரலாற்றில் மறக்கமுடியாதவை

## தளபதி ரமணன்

இன்று எத்தனையோ மனிதர்கள் தங்கள் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்கின்றார்கள், சாகின்றார்கள். ஆனால் மாவீரர்கள் தியாகச் சுடர்கள், தியாகிகளாகச் சென்று எமது தாயக பூமியை மீட்டு எடுப்பதறகாகப் பல இடர்களுக்கு மத்தியிலேயே உயிர்களை அர்ப்பணித்தவர்கள். கருமபுலிகளாகத் தம்மை அர்ப்பணிததவர்கள், சயனைட் உண்டு அர்ப்பணித்தவர்கள் இந்த மாவீரர்கள் எமது போராட்ட வரலாற்றிலே மறக்க முடியாதவர்கள்.

ஆகவே இந்த மாவீரர்களை ஈன்று எடுத்த பெற்றோர்கள், பெருமைக்குரியவர்கள் இவ்வாறு நேற்று முன்தினம் களுதாவளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய, மாவடி முன்மாரிக் கோட்ட இராணுவத் தளபதி ரமணன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இன்று நாங்கள் இலங்கை அரசாங்கத்தால் இராணுவத்துக்குச் சமமான இராணுவ சமநிலையுடன் இருக்கிறோம். நாங்கள் எங்களுடைய உரிமைகளைப் பெறுவதில் நிச்சயம் எங்களது போராட்டத்துக்கு நல்லதொரு விடிவு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வொரு மாவீரர்களும் தாங்கள் செய்த தியாகங்கள், அவர்கள் கண்டு கொண்ட இடர்பாடுகள் அனைத்தும் போராட்ட வரலாற்றில் மறக்க முடியாத ஒரு சான்றாக அமைகின்றது என்றார்.

பட்டிருப்புக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வாவின் தலைமையில் நடை பெற்ற இந்த நிகழ்வில், மாவீரர் காப்பகப் பொறுப்பாளர் ஐங்கரன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர் பெற்றோர்கள் கலந்து கொண்டதோடு, அங்கு களுதாவளை மகாவித்தியாலய அதிபரும் உரையாற்றினார்.

# இலங்கை-பாகிஸ்தான் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்

பாகிஸ்தானும், இலங்கையும் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவுள்ளன.

வரும் ஜனவரியில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா, பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளார். அப்போது இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

கொழும்புக்கு வந்திருந்த பாகிஸதான் சௌகத் அஸிஸ், கடந்த திங்கட்கிழமை இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அடுத்த இருதினங்களில் இரு நாடுகளினதும் அதிகாரிகள் கூட்டம் நடக்கவுள்ளது. இதில் தடையற்ற வர்த்தகம் தொடர்பான அனைத்து பிரச்சினைகளையும், அதில் பேசித் திர்ப்போம் என்றார்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா பாகிஸ்தான் செல்லும்போது, இரு நாடுகள் இடையே அரசியல், பொருளாதார ரீதியில் உறவை மேம்படுத்துவது தொடர்பாகப் பேசப்படும். இது தொடர்பான நடவடிக்கைகளின் அமுலாக்கம் குறித்து டிசம்பரில் ஆராயப்படும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் கூறினார்.

# குற்றங்கள் அதிகரிப்பு குறித்து ஆராயும் மாநாடு இன்று

இலங்கையில் அதிகரித்து வரும குற்றச் செயல்களுக்காகட காரணங்களைக் கண்டறிந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நாடாளுமன்றத்தில் விசேட செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜே.எம்.லொக்கு பண்டாரவால் நியமிக்கப்பட்டுள்ள இந்தச் செயற்குழுவின் முதலாவது கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இந்தச் செயற்குழுவில் 25 பேர் அங்கம் வகிக்கின்றனர். இதன் தலைவராக நீதி மறுசீரமைப்பு அமைச்சரான டபிள்யூ செனவிரட்ண நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

இந்தக் குழுவில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நடராஜா - ரவிராஜ் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாத ஒழிப்புச் சட்டம் மீண்டும் அமுலாக்கப்பட வேண்டும்

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்க தலைவர்

(கொழும்பு)

அமைப்பு ரீதியாகச் செயற்பட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுவோரையும், கூலிக்குக் கொலைகள் செய்வோரையும் கைது செய்வதற்காக ஜனாதிபதி உட்பட சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தமது சங்கம் சமர்ப்பித்துள்ள **Action Plane** என்ற பெயரிலான குற்றச் செயல்களை ஒழிக்கும் திட்டம் மற்றும் பயங்கரவாத ஒழிப்பு சட்டம் ஆகியவற்றை மீண்டும் செயற்படுத்ததாது இருப்பதன் பிரதிபலனே உயர் நீதிமன்ற நீதிபதியின் கொலை என, பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கத்தின் தலைவர் குணரட்ன நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்கமைய கொழும்பு நகரம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொறுபபாளர்களாக நியமிக்கப்பட்டு, குற்றவியல் ஒழிப்பு நடவடிக்கை பொலிஸ்மா அதிபரினால் ஆணையாளர் மாத்திரம் செயற்படுத்தப்பட வேண்டும்.

இதைத்தவிர குற்றவியல் ஒழிப்பின் பொருட்டு பொலிஸ் வாகனங்களுக்குப் பதிலாக அமெரிக்க பொலிஸார் பயன்படுத்துவதைப் போன்ற வாகனங்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அந்தத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் கடந்த யூலை மாதம் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, குற்றவியல் ஒழிப்பில் பயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரிகள் 20 பேருக்கு சேவைகள் வழங்கப்பட வேண்டும் எனவும் இந்தச் சங்கம் ஆலோசனை சமர்ப்பித்திருந்தது.

குற்றவாளிகளை விரைவாக கைது செய்யவேண்டும் என்றால், பயங்கரவாத ஒழிப்புச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தும்படி நாங்கள் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் தெரியப்படுத்தினோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# தென்னாபிரிக்காவுடனான முதல் டெஸ்ட்

# இந்தியா 4 விக்கெட் இழப்புக்கு 401!





(கான்பூர்)

இந்திய - தென்னாபிரிக்க அணிகள் இடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கான்பூரில் நடைபெற்றுவருகிறது.

முதல் இனிங்ஸில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட் இழப்புக்கு 510 ஓட்டங்களைக் குவித்து, ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதனைத் தொடர்ந்து முதல் இனிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி, ஷேவாக், காம்பீர், ஆகியோரின் 'அபார ஆட்டத்தால் 3 ஆவது நாளான நேற்றுமுன்தினம் ஆட்டநேர முடிவில் இந்தியா விக்கெட் இழப்பின்றி 185 ஓட்டங்களை எடுத்தது. ஷேவாக்கும், காம்பீரும் தலா 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. நேற்றுமுன்தினம் போலவே நேற்றும் பனிமூட்டம் இருந்ததால் போட்டி சற்று தாமதமாகவே தொடங்கியது.

இருவரும் களம் இறங்கினார்கள். ஆட்டம் தொடங்கியது முதல் இருவரும் நிதானத்துடன் ஆடினார்கள். 44.5 ஓவரில் இந்தியா 200 ஓட்டங்களைக் கடந்தது.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 211 ஆக இருந்தபோது ஷேவாக் சதம் அடித்தார். அவர் 162 பந்துகளில் 17 பவுண்டரிகளுடன் சதத்தைக் கடந்தார். இது அவரது 8 ஆவது சதம ஆகும்.

சிறப்பாக ஆடிவந்த காம்பீர் 96 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பொலக் வீசிய பந்தில் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இதன்மூலம் முதலாவது சதத்தைத் தவறவிட்டார்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 218 ஓட்டங்களைச் சேர்த்தது. இது தென்னாபிரிக்க அணிக்கு எதிராக முதல் விக்கெட் ஜோடி குவித்த அதிக ஓட்டங்களாகும்.

இதற்கு முன்பு 1996 ஆம் ஆண்டில் ஜொகனஸ்பேர்க்கில் நடைபெற்ற டெஸ்டில் மொங்கியா - விக்ரம் ரதோர் ஜோடி 90 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதையடுத்து 2 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ஷேவாக்குடன் ராவிட் இணைந்தார்.

உணவு இடைவேளையின்போது இந்திய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 235 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஷேவாக் 108 ஓட்டங்களுடனும், ராவிட் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

உணவு இடைவேளைக்குப் பின்பு இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். ஷேவாக் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினார். 64.1 ஆவது ஓவரில் ஹோல் வீசிய பந்தை ஷேவாக் இமாலய சிக்ஸராக மாற்றினார். அவரது ஆட்டத்தில் அனல் பறந்தது.





ஷேவாக் 149 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது பீட்டர்சன் வீசிய பந்தில் மேலும் ஒரு சிக்ஸர் அடித்தார். இதன் மூலம் 150 ஓட்டங்களைக் கடந்தார். அவர் 223 பந்துகளில் 22 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அதே ஓவரில் மேலும் 2 பவுண்டரிகள் அடித்தார்.

அதிரடியாக ஆடிவந்த ஷேவாக் 164 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹோல் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஸ்கோர் 294 ஆக இருந்தது.

இதையடுத்து 3 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ராவிட்டுடன் டெண்டுல்கர் இணைந்தார். சிறிது நேரத்திலேயே 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில் டெண்டுல்கர் ஆட்டமிழந்தார். அவரது விக்கெட்டை ஹோல் கைப்பற்றினார். அடுத்து கங்கூலி, ராவிட்டுன் ஜோடி சேர்ந்தார்.

தொடக்கத்தில் கங்கூலி மெதுவாக ஆடினாலும் பின்னர் விரைவாக ஓட்டங்களைக் குவித்து அரைச்சதத்தைக் கடந்தார். 57 ஓட்டங்களைப் பெற்ற அவர் பிரைனின் பந்துவீச்சில் பீட்டர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து 5 ஆவது விக்கெட்டுக்கு ஜோடியாக ராவிட்டுடன் லக்ஸ்மன் சேர்ந்தார். நான்காவது நாள் ஆட்டமுடிவில் இந்திய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 401 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ராவிட் 52 ஓட்டங்களுடனும், லக்ஷ்மன் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவினரால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டம் இன்று பி.ப 4 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது. இதில் யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து சென்.நீக்கிலஸ் அணி மோதவுள்ளது.

இதன் இறுதியாட்டம் நாளை 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12)




## அவுஸ்ரேலியா செல்லவுள்ள பாகிஸ்தான் அணி அறிவிப்பு

(லாகூர்)

அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்த மாத இறுதியில் அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது. இந்தப் போட்டிக்கான பாகிஸ்தான் அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

17 பேர் கொண்ட இந்த அணியில் முகமட் ஆசிப் மற்றும் முகமட் கலீல் ஆகிய 2 புதிய முகங்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஷபீர் அகமட் காயம் காரணமாக அவதிப்பட்டு வருவதால் அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை.

கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்ரேலிய பயணத்தில் பாகிஸ்தான் 3 டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வி கண்டது.

இதுவரை அவுஸ்ரேலிய மண்ணில் பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடர் எதையும் கைப்பற்றவில்லை என்பதால், இந்தமுறை அதிக முன்னெச்சரிக்கையுடன் வீரர்கள் ஆடத் தயாராகி வருகிறார்கள்.

பேர்த், மெல்போர்ன் மற்றும் சிட்னி மைதானங்களில் போட்டிகள் நடக்க இருக்கின்றன. டெஸ்ட் போட்டிகள் முடிந்த பின்னர் பாகிஸ்தான், அவுஸ்ரேலியா மற்றும் மேற்கிந்தியத் தீவு அணிகள் ஒருநாள் போட்டியில் மோதவுள்ளன.

வீரர்கள் விபரம் வருமாறு-

இன்ஸமாம் உல்ஹக் (கப்டன்), இம்ரான் பர்ஹத், சல்மான்பட், யாசிர் ஹமீட், யூனுஸ் கான், யூசுப் யுகானா, ஆசிம் கமல், கம்ரன் அக்மல், அப்ரிடி, ரஸாக், சொகைப் மலிக், அக்தர், முகமட் சமி, ஆசிப், கலீல், நவீத் ராணா, டனிஷ் கனேரியா.

## இந்திய பயணம் எதிலும் கிப்ஸ் பங்கேற்கமாட்டார்

### தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவிப்பு

(கான்பூர்)

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியா வந்தபோது கப்டன் குரஞ்ஞே, கிப்ஸ், போயே மற்றும் ஸ்டைர்டோம் ஆகிய 4 வீரர்கள் மீது சூதாட்ட குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக டெல்கி பொலிஸ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் கிப்ஸ் மற்றும் போயே ஆகியோரிடம் விசாரணை நடத்துவதற்கு டெல்கி பொலிஸ் முடிவு செய்திருந்தது.

ஆனால், விசாரணைக்குப் பயந்து இந்திய பயணத்தில் இருந்து சம்பந்தப்பட்ட 2 வீரர்களும் விலகிவிட்டனர். முன்னதாக டெல்கி பொலிஸ் அனுப்பிவைத்த கேள்விகளுக்கு போயே பதில் அனுப்பிவிட்டார்.

ஆனால், கிப்ஸ் இதற்குப் பதில் அளிக்க மறுத்துவிட்டார். ஆனாலும், இந்திய பயணத்தின்போது போயே கைது செய்யப்படமாட்டார் என்ற உறுதிமொழியை வழங்க டெல்கி பொலிஸ் மறுத்து விட்டது.

இதனால் கடைசி நேரத்தில் போயே விலகிக்கொண்டார். இந்த நிலையில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைத் தலைவர் மஜோலா நிருபர்களிடம் கூறுகையில் -

இந்தியாவில் இனி நடக்கும் எந்தப்போட்டியிலும் கிப்ஸ் கலந்துகொள்ளமாட்டார். விசாரணை இருக்காது என்ற உத்தரவாதத்தை இந்திய பொலிஸ் வழங்கினால்தான் இதுபற்றி முடிவு எடுக்கமுடியும்.

இந்தியப் பயணத்தில் இருந்து கிப்ஸ் மற்றும் போயே ஆகியோர் விலகியதற்கு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றார்.

## பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக கான்பூர் மைதானம் அமையவில்லை!

### அனில் கும்ளே கருத்து



(கான்பூர்)

கான்பூர் ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இல்லை என்று இந்திய சுழற்பந்து வீச்சாளர் கும்ளே கூறியுள்ளார்.

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே முதல் டெஸ்ட் போட்டி கான்பூரில் உள்ள கிரீன்பார்க் மைதானத்தில் நடந்துவருகிறது.

சமநிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த டெஸ்டின் முதல் இனிங்ஸில் கும்ளே தனது மாயாஜால சுழற்பந்து வீச்சில் 131 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அவர் 54 ஓவர்கள் பந்து வீசினார்.

கும்ளே 28 ஆவது முறையாக டெஸ்டில் 5 விக்கெட்டுக்களுக்கு மேல் கைப்பற்றியிருக்கிறார். இந்திய வீரர்களில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய கபில்தேவின் சாதனையை முறியடிக்க கும்ளேக்கு இன்னும் 5 விக்கெட்டுகள்தான் தேவையாகும்.

நேற்றுமுன்தினம் ஆட்டம் முடிந்ததும் கும்ளே நிருபர்களிடம் கூறியதாவது -

கான்பூர் ஆடுகளம் பந்து வீச்சாளர்களுக்கு உதவிகரமாக இல்லை. துடுப்பாட்ட வீரர்களுக்குத்தான் சாதகமாக இருக்கிறது. பந்து சுழலவோ, பவுன்சோ ஆகவில்லை. கடினமாக உழைத்ததற்கு 6 விக்கெட்டுக்கள் கிடைத்தது மகிழ்ச்சியளிக்கிறது. பிட்சை பற்றி நான் அதிகம் எண்ணுவது இல்லை.

கபில்தேவின் சாதனையை முந்தவேண்டும் என்ற நினைப்போடு ஆடவில்லை.

கௌதம் கம்பீர், ஷேவாக் இணை இந்திய அணிக்கு சிறப்பான தொடக்கம் அளித்துள்ளது. இது பாராட்டுக்குரியது. இவ்வாறு கும்ளே கூறினார்.

## ஆக்ரோஷமான ஆட்டத்தால் நிலைகுலையச் செய்துவிட்டனர்

### தென்னாபிரிக்க பயிற்சியாளர் ஜென்னிங்ஸ்

(கான்பூர்)

ஆக்ரோஷமான ஆட்டத்தால் எங்களது அணுகுமுறையை இந்திய வீரர்கள் நிலைகுலையச் செய்துவிட்டனர் என தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளர் ஜென்னிங்ஸ் 3 ஆம் நாள் ஆட்டமுடிவில் நிருபர்களிடம் கருத்துத் தெரிவித்தார்.

நாங்கள் நிர்ப்பந்தம் அளிப்போம் என எண்ணியிருந்த நேரத்தில் அற்புதமான துடுப்பாட்டத்தால் அவர்கள் எங்களுக்கு நிர்ப்பந்தம் அளித்து வருகின்றனர்.

அவர்களது அதிரடி ஆட்டத்தால் எங்களது பந்து வீச்சாளர்கள் செய்வதறியாது திகைத்துப்போயுள்ளனர். கம்பீர் - ஷேவாக் சவாலை முறியடிக்கும் விதமாக எமது வீரர்களால் பந்தை நேர்த்தியாக வீச முடியவில்லை.

ஓரிரவில் அதை முறியடிப்பதற்கான உத்தியை கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம். பலமான இந்திய அணிக்கு எதிராக சற்று உறுதியான இலக்கைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என நினைத்தோம்.

அதனாலேயே 3ஆம் நாள் காலையிலும் சிறிது நேரம் ஆடினோம். 510 ஓட்டங்கள் என்பது நல்ல ஸ்கோர்.

கான்பூர் பிட்ச் மாதிரியான சூழலில் விளையாடுவதற்கேற்ற போதிய அனுபவம் எமது வீரர்களிடம் இல்லை. பெரும்பாலான வீரர்கள் இளைஞர்கள். அதனால் அவர்கள் நிலைப்பட சற்றுக் காலம் பிடித்தது என்றாலும் அவர்களது ஆட்டத்தில் மகிழ்ச்சியடைகிறேன் என்றார் ஜென்னிங்ஸ்.

# பாஸ் நடைமுறையை நீக்க படைத்தரப்பு மறுப்பு

(வடமராட்சி கிழக்கு)

மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும்வேளையில் படையினரால் வழங்கப்பட்ட பாஸ் நடைமுறையை நீக்கி, தம்மைச் சுதந்திரமான முறையில் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு மணற்காடு மக்கள் விடுத்த கோரிக்கையை யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நிராகரித்துள்ளார்.

மணற்காடு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அந்தப் பகுதி மக்களுக்கும், படை அதிகாரிகளுக்குமிடையில், மணற்காடு சென்.அன்ரனிஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே மக்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர்.

மணற்காட்டில் வாழும் தமக்கு, படையினர் வழங்கிய பாஸ் நடைமுறையால் சுதந்திரமாகத் தொழிலை மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும், இந்தப பாஸ் நடைமுறையால் தமது வாழ்க்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் இராணுவ கட்டளை அதிகாரியிடம் தெரிவித்தனர். ஆனாலும், இவற்றைக் கேட்ட கட்டளை அதிகாரி மீன்பிடிப்பதற்கான பாஸ் நடைமுறை நீக்கப்படமாட்டாதெனத் தெரிவித்தார்.

# அபிவிருத்தி செயலகம் அரியாலையில் திறப்பு!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட (நிகொட்) நிதி உதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக அரியாலை மத்தி, தெற்கு கிராம புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்ட நிறைவேற்று உபசெயலகத் திறப்பு விழா, நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை சமூக சேவையாளர் எஸ்.எஸ்.ரி.பத்மநாதன், நிகொட் உதவித்திட்டப் பணிப்பாளர் நவரட்ண ராஜா, நிகொட் இணைப்பாளர் கெங்காதரன், அரியாலை கிராமத் தலைவர் செல்வராசா ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

செயலகப் பெயர்ப் பலகையை பத்மநாதன் நிரைநீக்கம் செய்து வைக்க, நவரட்ணராஜா மண்டபத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். வரவேற்புரையை தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாக அலுவலர் கதிர்காமத்தம்பி நிகழ்த்தினார். தொடர்ந்து பத்மநாதன், நவரட்ண ராஜா ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

## உடுவில் வைத்தியசாலையில்

# வைத்தியர் இல்லாமல் நோயாளர்கள் அவதி!

(உடுவில்)

உடுவில் அரசினர் வைத்திய சாலையில் கடந்த பத்து நாட்களாக வைத்தியர் கடமையில் இன்மையால் நோயாளர் பலர் வந்து ஏமாற்றத்துடன் அதிக தூரத்திலுள்ள வைத்தியசாலைகளை நோக்கிச் செல்கின்றனர்.

இங்கு கடமைபுரிந்த பெண் வைத்தியர் சுகயீனம் காரணமாக விடுமுறையில் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், இதற்கு மாற்று ஏற்பாடாக பதில் வைத்தியர் கடந்த பத்து நாட்களுக்கு மேலாக நியமிக்கப்படாமையால், நோயாளர்கள் திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

மழைகாலமாகையால் தொற்று நோய்கள் காரணமாக ஏராளமான நோயாளர்கள் இங்கு வருகின்றனர். இவர்கள் நோயின் வேதனையுடன் மீண்டும் அதிகதூரம் சென்று மருந்து எடுப்பதை தினமும் காணமுடிகிறது. அத்துடன் இங்கு சகல மருந்துகளும் தட்டுப்பாடாக இருப்பதாகவும் நோயாளர்கள் தெரிவித்தனர். (101)

# உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சுகாதார தொழிலாளர்களுக்கு பதவியுயர்வு

## வட - கிழக்கு இணைப்பாளர் தெரிவிப்பு

நாட்டிலுள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேசசபைகளில் கடமையாற்றும் சுகாதார, வீதித் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு, மிக விரைவில் பதவியுயர்வுகள் வழங்கப்படவுள்ளதாக அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு சங்கத்தின் வட - கிழக்கின் இணைப்பாளர் செ.சந்திரகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கடந்த இரண்டாம் திகதி அகில இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க ஒருங்கிணைப்புச் சங்கத்தினர் - மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஜானக பண்டார தென்னக்கோனைச் சந்தித்து மேற்படி கோரிக்கையை முன்வைத்தனர்.

இதன் பிரதிபலனாக வடமேல் மாகாண சபையின் பிரதம செயலாளர் எக்கநாயக்க தலைமையில்- சுகாதார, வீதித் தொழிலாளர்களுக்கு அவர்களது சேவையின் அடிப்படையில் வகுப்பு 1,2,3 எனத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இந்தச் சங்கத்தின் இணைப்பாளர் தெரிவித்தார். (100)

# மணல்காட்டில் கரையொதுங்கிய கோளவடிவ மர்மப் பொருள்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு - மணல்காடு கடற்கரையில் ஐந்தடி விட்டமுள்ள கோளவடிவான மர்மப் பொருள் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை கடற்தொழிலுக்குச் சென்றிருந்த மீனவர்கள் இந்த மர்மப் பொருளைக் கண்டனர். உடனடியாக அவர்கள் இது பற்றி கரையோரப்பகுதி இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்தினர். இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்றிருந்த இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவினர் அதனைப் பரிசோதனை செய்தனர்

இந்த மர்மப் பொருளில் "FXN.B" என்ற எழுத்து பொறிக்கப்பட்டிருந்தது. (14)


# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## மூன்றாவது அகவையில்



பெயர் : இ.மதீஷன்
முகவரி : அல்வாய்

## நான்காவது அகவையில்



பெயர் : உ.யாளாளன்
முகவரி : அரியாலை

## எட்டாவது அகவையில்



பெயர் : லோ.அபிராமி
முகவரி : வல்வெட்டித்துறை

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்


# தண்டபாணி தேசிகரின் மணிவிழா வல்வையில்



சரித்திரப் பிரசித்திபெற்ற வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குருவும், அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி தேசிகரின் 60 வயது பூர்த்தியை, முன்னிட்டு இன்று பிற்பகல் 3 மணிக்கு வல்வை ஸ்ரீ முத்து மாரியம்மன் தேவஸ்தானத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் தலைமையில் மணி விழா நடத்தப்படவுள்ளது.

இந்த விழாவைச் சிறப்புற நடத்த சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், லண்டன், கனடா, அவுஸ்ரேலியாவிலுள்ள புலம்பெயர்ந்த மக்கள் நிதியுதவி வழங்கியுள்ளனர். இந்த விழாவில 'தண்டபாணியம்' என்ற மலரும் வெளியிடப்படவுள்ளது. இந்த நிகழ்வில் சிறப்புரைகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான - எம்.கே.சிவாஜிலிங்கம், ஜி.ஜி. கஜேந்திரகுமார் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (116)

# நெடுந்தீவு பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நாளை

மாவீரர் நாள் நிகழ்வுகளையொட்டி, நாளை காலை 9.30 மணிக்கு மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நெடுந்தீவில் பெரும் எழுச்சியுடன் நடத்தப்படவுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த 56 மாவீரர்களின் பெற்றோர்களையும் நாளை நெடுந்தீவு மத்திய பகுதியிலுள்ள மாவீரர் நினைவுச்சுடர் பகுதியிலிருந்து, பாடசாலை மாணவர்களது பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவந்து, மத்திய பகுதியில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் கலையரங்கில் சிறப்பாக அமைக்கப்பட்ட மாவீரர் மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை மாவீரர் நினைவு மண்டப நிகழ்வுகள் முடிவுற்றதும், பெற்றோர்கள் அனைவரும் நெடுந்தீவு மகா வித்தியாலய உள்ளக அரங்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டு உபசரணை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள் யாவும் நெடுந்தீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டுக் குழுவினரது ஏற்பாட்டின்கீழ் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# வடமராட்சி வீதி புனரமைப்புக்கு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட வீதிகளைப் புனரமைப்பதற்கு துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 21 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வந்துசேர்ந்துள்ளதாக வடமராட்சீ தெற்கு - மேற்கு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

புனரமைக்கப்படவுள்ள வீதிகளான கப்பூது விராலி வீரகத்திப் பிள்ளையார் கோயில் வீதிக்கு 15 லட்சம் ரூபாவும், வதிரி பூவர்கரை பிள்ளையார் கோயில் வீதிக்கு 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், வதிரி துலாக்கட்டு இரும்புமதவடி வீதிக்கு 2 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த வீதி புனரமைப்புக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

# கசிப்பு உற்பத்தியாளருக்கு நீதிமன்றம் எச்சரிக்கை!

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு, மறுபடியும் கைதுசெய்யப்படும் பட்சத்தில் ஐந்துவருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படும் என யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் எச்சரிக்கை விடுத்தார்.

கடந்த புதன்கிழமை பொதுமக்களால் கொடுக்கப்பட்ட தகவலையடுத்து, கோண்டாவில் கிழக்கு சென்.செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் 40 கிராம் கசிப்பும், 800 கிராம் கோடாவும் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் உரும்பிராய் மேற்கு அன்னங்கையில் ஒருவரது வீட்டின் முற்றத்தில் புதைத்துவைக்கப்பட்டிருந்த 3 கிராம் கசிப்பும், 2640 கிராம் கோடாவும் கைப்பற்றப்பட்டன. இவர்களை கோப்பாய் பொலிஸார் கடந்த 17 ஆம் திகதி யாழ். நீதிமன்றில் ஆஜர்செய்தனர். (82)

## சுற்றாடல் முகாமைத்துவ கற்கைக்கு

# குடாநாட்டிலிருந்து விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன!

சுற்றாடல் பாதுகாப்பு முகாமைத்துவமும், நிலையான அபிவிருத்தியும் என்ற கற்கை நெறிக்கு விண்ணப்பித்த யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

வடகுகு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி உதவியாளர் திணைக்களத்தால் வெளிநாட்டில் இந்தக் கற்கைநெறியைத் தொடர்வதற்காகவே விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப்ப முடிவுதிகதியன்றே யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்பங்கள் கிடைத்தமையால் , பிரதேச சபை செயலாளர்களால் பிராந்திய உள்ளூராட்சி உதவியாளர் ஊடாகவே இதற்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன.

தமக்கு விண்ணப்பப் படிவங்கள் தாமதமாகக் கிடைத்தமையைக் காரணம்காட்டி, யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் விண்ணப்பதாரிகளுக்குக் கடிதமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (91)

# க.பொ.த சாதாரணதர மாணவருக்கு கருத்தரங்கு

சுன்னாகம் றோட்டறிக் கழகத்தினரின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள் எதிர்வரும் 25, 26, 28 ஆகிய திகதிகளில் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கலவி, ஆங்கிலம், வர்த்தகம் ஆகிய பாடங்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகளே நடைபெறவுள்ளன. (72)

# தண்டபாணியம்

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தே

சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார் சம்மேளனம்,

வேதாரணிய குரு பரம்பரை சைவக்குருமார் அர்ச்சகர்க

## வாழ்த்துரை

சைவமும், தமிழும் தழைத்தோங்கும் வல்வெட்டித்துறையில் அமைந்து விளங்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் பிரதமகுரு, சமாதான நீதிவான் சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் அவர்களின் அறுபதாவது அகவையையொட்டி வெளிவரும் தண்ட பாணியம் என்ற மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சைவப் பண்பாட்டின் பாதுகாவலர்களாக சிவாச்சாரியார்கள் விளங்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயமாகும். அகில உலகச் சைவக் குருமார் சம்மேளன சிவாச்சாரிய பீடாதிபதியாக விளங்கும் சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் அவர்கள் சுமார் நாற்பது வருடங்களாக இந்துசமய வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றி வருவதை நான் நன்கு அறிவேன். இவர் தலைமையில் நடைபெற்ற மகோற்சவங்கள், கும்பாபிஷேகங்கள் பலவாகும். இவற்றை இவர் ஆற்றுகின்றபோது எம் எல்லோருக்கும் பக்தி உணர்வும், பரவசமும் ஏற்படும். இவர் சமய ஒழுக்க முடையவராக சமயப் பணியுடன் சமூகப் பணிகளிலும் ஈடுபாடுடையவராக விளங்கு வதைப் போற்றுகின்றேன். இவர் மேன் மேலும் சீரும் சிறப்பும்பெற்று தம்பதி சமேதரராகப் பல்லாண்டுகள் வளமாக வாழவேண்டு மென்று மனமார வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் சு.மோகனதாஸ்
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.

## மணிவிழா வாழ்த்து

சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
வல்வை முத்துமாரியம்மன் பிரதமகுரு
சமாதான நீதிவான்
அவர்களை வாழ்த்திப் பாடிய மாலை

செந்தண்மை குருவழியின் பரம்பரையோன்
செழும் ஞான தண்டபாணிக தேசிகர்
தந்த பெரும் சேவையினைத் தரணி மீதில்
தமிழ் சைவ மக்கள் நாம் மறக்கற் பாலோ
செந்தமிழும் சைவமும் செழித்துவாழ
வந்தனைகள் புரிந்திடும் ஆலயத்தில் பூசை
சிந்தையிலே பெரும் பக்தி ஊற்றெடுக்கச்
சிவபூசை சக்தி பூசை செய்கின்ற குருக்கள் ஐயா வாழி
வாழி
சுபமங்களம்.

அருள்ஞானக்கிரியாபணி
சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள்
உடுப்பிட்டி வடக்கு கொம்மந்தறை
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் திருக்கோயில் பிரதமகுரு

## அருளாசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு,

வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குருவாக விளங்கும் சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகக் குருக்கள் இன்று தனது அறுபதாவது அகவை விழாவைக் கொண்டாடுவதை இட்டு மகிழ்ச்சியடைகின்றோம். சைவக் குருமார் பரம்பரையில் தொடர்ந்து குருத்துவக் கல்வியை முறையாகப் பயின்று குருவாக ஆலய விழாக் களையும், கும்பாபிசேஷகங்கள் பொது வைபவங்கள் அனைத்தையும் முறையாகச் செயற்படுத்தி சைவத்தமிழ் மக்க ளின் வழிகாட்டியாக வாழ்ந்து வருகின்றார். எல்லாருடனும் இனிமையாகப் பேசவும் பழகவும் எடுத்த விடயத்தைச் செவ்வனே ஆற்றுகின்ற திறமையும் எல்லோரும் மனநிறை வுடன் வாழவேண்டும் என்ற எண்ணமும் உடையவர். வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாற்பது வருடங்களாகக் குருவாக இருந்து ஆலய வளர்ச்சிக்கும் இந்த ஊர் மக்களின் வளர்ச்சிக்கும் நற்பணி ஆற்றிவருகின்றார். சைவக் குருமார் அனைவரும் குருத்துவப் பணியில் நிறைவாக வாழவேண்டும் என்ற வகையில் அர்ச்சகர் சங்கத் தலைவராக இருந்து பணியாற்றியது குறிப்பிடத்தக்கது. பல பட்டங்கள் பதவிகளை உடைய குருக்களை இலங்கை அரசு அங்கீகரித்துச் சமாதான நீதிவான் எனும் கௌரவம் வழங்கி சிறப்புச் செய்துள்ளது. குருக்கள் அவர்கள் இன்று போல் என்றும் பல்லாண்டு காலம் வாழ இறைவனைப் பிராத்திக்கின்றோம். இன்று ஷஷ்டி யப்த பூர்த்தி விழாவைக் காணும் சிவஸ்ரீ தண்டபாணிக தேசிய தம்பதியினர் பல்லாண்டு காலம் வளமுடன் வாழ வாழ்த்துகின் றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
சமாதான நீதிவான் அவர்களின்
'மணிவிழா'

காலம் :- 24.11. 2004 புதன்கிழமை பி.ப 3.00 மணி
இடம் :- வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மண்டபம்.

***துவாளி மண்த்த பெரும் குருவாகவும் ஈழத்தில் பல கிரியைகளைச் செய்து புகழ் பூத்த எமது ஆசாரிய குருவாக விளங்கும் மணிவிழாக் காணும் இவரைப் பல்லாண்டு காலம் வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்.***

வாழ்த்துவோர்

சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள் (வேவில் பிள்ளையார் ஆதீனகர்த்தா)
சிவஸ்ரீ . விவேகானந்தக் குருக்கள் (யாழ்.வீரகத்தி விநாயகர் ஆதீனகர்த்தா)
சிவஸ்ரீ அ.திருஞானசம்பந்தக் குருக்கள் (பத்ததி வித்தகு சிரோன்மணி)
துவாளி பிள்ளையார் அம்மாள் பிரதமகுரு.
சிவஸ்ரீ க.வீரபத்திரக் குருக்கள் மீசாலை முருகன் கோயில் - பிரதமகுரு
சிவஸ்ரீ க.ஜெயக்குமார் ஐயா - ராக்கிச்சி அம்பாள் பிரதமகுரு வல்வை.
சிவஸ்ரீ சி.நீலகண்டக் குருக்கள் வரணி திக்கில் முருகன் பிரதமகுரு.
சிவஸ்ரீ கோபி ஐயா
இருபாலை பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர்.

## சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிக குருக்கள் ஐயா அவர்களின் மணிவிழா வாழ்த்துரை

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலின் பிரதம குருக்களாகப் பெருந்தொண்டாற்றும் சிவஸ்ரீ சோ.தண்டபாணிகக் குருக்கள் ஐயா அவர்களுக்கு மணிவிழா நடைபெற இருப்பதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். குருக்கள் ஐயா அவர்கள் பல ஆண்டுகள் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் பிரதம குருவாகப் பணிபுரிந்து தொண்டாற்றிக் கோயிலை நன்நிலைக்குக் கொண்டுவந்துள்ளார்.

சைவாலயங்கள் நல்ல முறையில் சிறந்தோங்கப் பிராமணக் குருக்கள்மாரும், சைவக் குருக்கள்மாரும் எமது நாட்டின் இரு கண்களாகத் திகழ்கின்றார்கள். இந்த வகையில் வணக்கத்துக்குரிய தண்டபாணிகதேசிய ஐயா சைவ ஆகமங்களில் ஆழ்ந்த அறிவும், கிரியைகளைச் செம்மையுறச் செய்யும் அனுபவமும், சமயக் கருத்துக்களைச் சிறப்புறப் பிரசங்கிக்கும் ஆற்றலும் நிறைந்தவர். இவர் பல கோயில்களில் கும்பாபிஷேகங்கள், மகோற்சவங்கள், குருபட்டாபிஷேகங்கள் என்பவற்றைச் சிறப்புற நடாத்திப் பெரும் பணி செய்துள்ளார்.

சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவை, அகில உலக சைவக் குருமார்சபை, வேதாரணிய குருபரம்பரை சைவக்குருமார் அர்ச்சகர்களின் நிறுவகம் போன்றவற்றில் தம்மை ஈடுபடுத்தி சைவ சமூகத்துக்குச் சேவையாற்றி வருகிறார்.

எல்லாம் வல்ல துர்க்கையம்மனின் திருவருளினால் சிவஸ்ரீ சோ.தண்டபாணிகக் குருக்கள் ஐயா எல்லா நலமும் பெற்று வாழவும், அவரது மணிவிழா சிறப்புறவும் வாழ்த்தி அமைகிறேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சமாதான நீதிபதி
தலைவர் – ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

## வாழ்த்துவோ

அழகெழில் மிஞ்சும் தமிழர் நாடாம்
திருப்பொலிவுடன் கொழிக்கச் செய்து
உருவகம் எம் அன்பின் உறைவிடமென
எங்கும் தங்கும் சூழலில்
உங்களின் அன்புச் சின்னங்கள்
மென்மேலும் பதிவாகிய போது அமைதியா
எமது வாழ்வில் அமைதி நிலைத்திட
மணிவிழா காணும்
பிரம்ம ஸ்ரீ வை சோஸ்கந்தகுருக்கள் -
மகாவள்ளி அம்மா
தம்பதிகளின் மணிவிழாவில்
நூற்றாண்டு காலம் வாழ வாழ்த்துகிறோ

## மணி விழா சிறப்புற வாழ்த்து

- சிவஸ்ரீ சோ. இராமகிருஸ்ண ஐயர் - துவாளி பிள்ளையார் கோவில் உடுப்பிட்டி
- சிவஸ்ரீ வே .பாலச்சந்திர குருக்கள் வேவிற் பிள்ளையர் கோவில்
- சிவஸ்ரீ வே. கந்தசாமி குருக்கள் உல்லியன் எல்லை கண்ணகை அம்மன் கோயில் வ
- சிவஸ்ரீ சதா சோமஸ்கந்தக் குருக்கள் கும்பவாரி இமையாணன் உடுப்பிட்டி
- சிவஸ்ரீ ஜெயபால சுந்தரக் குருக்கள் (துரை அய்யா புற்றளைப் பிள்ளையார் கோயில் புலோலி தெற்கு
- சிவஸ்ரீ இ.திருக்குமரக் குருக்கள் பிள்ளையார் கோயில் நெடியகாடு வல்வெட்டித்து
- சிவஸ்ரீ தந்தகோபாலக் குருக்கள் பிள்ளையார் கோவில் நெடியகாடு வல்வெட்டித்து
- சிவஸ்ரீ அ. மதியாபரணக் குருக்கள் ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் தம்பசிட்டி பருத்
- சிவஸ்ரீ உலக யோகேஸ்வரக் குருக்கள் (வரதய்யா) கெருடாவில்
- சிவஸ்ரீ சி.இந்திரராஜ குருக்கள் இந்திரன் அம்மன் கோவிலடி துன்னாலை
- சிவஸ்ரீ உலகநாதன் விக்னேஸ்வரன் குருக்கள் - பிரதமகுரு கெருடாவில்
- சிவஸ்ரீ விக்கினராஜன் குருக்கள் பிரதமகுரு மாடந்தை பிள்ளையார் கோயில்
- சிவஸ்ரீ தண்டபாணி தேசிகக் குருக்கள் பிரதமகுரு லக்கணவத்தை கற்பகப் பிள்ளையார் கோயில்
- சிவஸ்ரீ அ.திருஞானசம்பந்தக் குருக்கள் பிரதமகுரு துவாலி அம்மன் கோயில்

## வாழ்த்துகிறோ



ஸ்ரீ லங்கா வல்வெட்டித்துறைப் பகுதியி முத்துமாரியம்மன் கோயில் பிரதம குருவான பாணிக தேசிகரின் நண்பர்கள் சிஷ்யர்கள் அ சேர்ந்து அவரது ஷஷ்டியப்த பூர்த்தி மணிவி சிறப்பாகக் கொண்டாடி அதனைத் தொடர்ந்து மலர் வெளியிட இருப்பதையும் அம்மலரிற் சிற எழுத்தாளர்களைக் கொண்டு ஆன்மீக அநேக வி ளையும் பக்திப் பாடல்களையும் வெளியிட இரு மறிந்து ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் மிக்க மகிழ்ச் துள்ளார்கள். விழாவைச் சிறப்பாக நடந்து மக்களுக்குப் பயன்படும் படி அமைந்து ஸ்ரீ தொடர்ந்து இறை பணிகளைச் செய்துகொண்டு மாக வாழவேண்டும் என்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமி ளாசி வழங்கி வாழ்த்திய வாழ்த்துச் செய்தி கப்படுகிறது.

ஸ்ரீ. எஸ் தண்டபாணிக தேசிகர் பிரம்ம குரு
ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில்
வல்வெட்டித்துறை
இலங்கை

ஜெகட் குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்
ஸ்ரீ காஞ்சி கோடி பீடம்
காஞ்சிபுரம்
இந்தியா.

# க.பொ.த சாதாரணதரம் மாதிரி வினாக்கள்

## விஞ்ஞானமும் தொழிநுட்பமும்

I.

A. புவியிலிருந்து பல்வேறு விதமான பொருட்களைப் பெறுகின்றோம். கனிய எண்ணை கனிப்பொருட்கள், நவரத்தினங்கள், களிமண், கல்சியச் சேர்க்கைகள் போன்றன அவற்றுள் சிலவாகும்.

1. இரத்தினக்கற்கள் அகழும் இடங்கள் இரண்டு தருக?
2. சிலிக்கா மணலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வது எது?
3. காரியத்தின் பயன்பாடு ஒன்று தருக?
4. இரத்தினக்கற்கள் விலை உயர்வாகக் காணப்படக் காரணம் யாது?
5. a. கண்ணாடியின் இயல்புகள் 2 தருக?
   b. கண்ணாடியின் வகைகள் 2 தருக?

B. புவியிலிருந்து கிடைக்கும் வளங்களில் கனிநெய்யும் ஒன்றாகும்.

1. கனிய நெய் எவ்வாறு உருவாகின்றது?
2. பெற்றோலியத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் 2 தருக?
3. கனிய எண்ணெணெய்க் கிணறுகள் தோண்டும் போது மெதேன், எதேன் , புறப்பேன், பியூற்றேன் போன்ற வாயுக்கள் வெளிவரும் இதில் பியூற்றேனின் கட்டமைப்பை வரைக.
4. பல் பகுதியாக்கம் என்றால் என்ன?
5. திரவ பெற்றோலிய வாயுவில் அதிகம் அடங்கியுள்ள வாயு எது?
6. மெதேன் ஆனது வளியுடன் தகனம் அடையும் முறையை காட்ட சமப்படுத்திய சமன்பாட்டை தருக.

II. அங்கிகள் யாவற்றினதும் உடல் கலங்களினால் ஆக்கப்பட்டுள்ளது. கலங்கள் பல சேர்ந்து இழையங்களை உருவாக்குகின்றது.

1. தாவரக்கலம் ஒன்றின்பகுதிகளைக் காட்டக்கூடியவாறு அதன் படத்தை வரைந்து பெயரிடுக.
2. தாவரக்கலம் ஒன்று விலங்குக்கலமொன்றிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறது?
3. இழையம் என்றால் என்ன?
4. விலங்கு ஒன்றில் காணப்படக்கூடிய இருவகை இழையங்களைப் பெயரிடுக.
5. தாவரங்கள'ல்
   a. நீர் கனியுப்பை கடத்த
   b. உணவை கடத்த உதவும். இழையங்கள் எவை?
6. தாவரங்களில் நீரும் கனியுப்பும் மேல்நோக்கி கடத்தப்படுவதற்கு வேர்முக்கம் எவ்வகையில் உதவுகின்றது என்பதை எவ்வாறு காட்டுவீர்.
7. தாவரங்களில நீரையும், கனியுப்பையும் மேல்நோக்கி கடத்துவதில் உதவும் வேறு இரு வகைகள் எவை?

III. இயற்கைச் சூழலை மாசடையாது பாதுகாத்தல் எமது கடமை.

1. இனம், சாகியம், உயிர்க்கோளம் என்பவற்றை வரைவிலக்கணப் படுத்துக?
2. அங்கிகளுக்கிடையேயான நெருக்கமான தொடர்புகள் 4 தருக?
3. வன விலங்குகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதற்கான இரு காரணங்களைத் தருக?
4. நைதரசன் வட்டச் செயன்முறையை விபரிக்க?
5. காட்டில் பட்டினியால் இருப்பதற்கு கூடிய சாத்தியக் கூறு புலிக்கே உண்டு முயலுக்கல்ல விளக்குக.
6. உணவுச் சங்கிலிகளில் இணைப்புக்களில் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் யாது?
7. பிரிகையாக்கிகளை எவை? அவற்றின் தொழிற்பாடு யாது?

IV. ஆவர்த்தன அட்டவணையில் A-X வரையிலான அடுத்துள்ள மூலகங்களினது அனுஎண் எதிர் உருகுநிலை வரைபு கீழே தரப்பட்டுள்ளது.



1. மூலகம் D யின் இலத்திரன் நிலையமைப்பையும், வலுவையும் தருக.
2. உருகுநிலை மிக குறைவாக உள்ள மூலக எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தது.
3. மூலகம் B ஐ வளியில் வெப்பம் ஏற்றும் போது நிகழும் தாக்கத்திற்கான சமப்படுத்திய சமன்பாட்டைத் தருக.
4. B பதார்த்தத்தை வெப்பம் ஏற்றும் போது உண்டாகும் சேர்வையில் உள்ள பிணைப்பு வகையினையும் அந்தச் சேர்வைக்கு இருக்கக் கூடிய இயல்புகள் இரண்டினையும் தருக.
5. மேலே குறிப்பிட்ட சேர்வையில் இலத்திரன் நிலையமைப்பை காட்டப் படம் வரைக.
6. மேலே F ஐ வெப்பமேற்றினால் நீர் அவதானிக்கக் கூடிய இரு அம்சங்கள் எவை.
7. உமக்கு P,Q எனப் பெயரிடப்பட்ட இரு கரைசல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அயன் பிணைப்பு சேர்வை, மற்றையது பங்கீட்டுவலுப் பிணைப்புச் சேர்வை, தரப்பட்ட கரைசலில் உள்ள பிணைப்பு வகைகளை இனம் காண்பதற்கு
C. உமக்கு தேவையான மேலதிக பொருட்கள் எவை?
D. எவ்வாறு இனம் காண்பீர் என்பதை குறிப்பிடுக.

V. தொழிநுட்பவியலாளர் ஒருவர் பலகை ஒன்றில் திருகாணி செலுத்தியினால் பூட்டுவதை மேலுள்ள படம் காட்டுகிறது.



1. ஆணிகளை பூட்டுவதில் இங்கு பயன்படுத்தப்படும் பொறிகள் எவை?
2. அவர் ஆணிகளை பூட்டுவதற்கு குறைந்த எத்தனத்தை பிரயோகிக்க விரும்பின் எப்படிப்பட்ட திருகாணி செலுத்தியை உபயோகித்தல் சிறந்தது.
3. புரியாணிகளின் புரியிடைத்தூரம் 2/10 cm ஆயின் 10 புரிகள் கொண்ட ஆணியை கடைசிப்புரிவரை பூட்டும் போது ஆணி சட்டத்தில் எவ்வளவு தூரம் செல்லும்.
4. பலகை சட்டத்தின் தடை (சுமை) 660 m கையாகவும் எத்தனம் 110 m ஆகவும் இருப்பின் திருகாணி செலுத்தி யின் பொறிமுறை நயம் யாது?
5. இந்த ஆணிகளின் புரி முழுவதும் மறையும் வரை பூட்டுவதில் செய்யப்படும் வேலை யாது?
6. திருகாணி செலுத்திய வேலையின் பின்னர் உரிய இடத்தில் வக்கும் போது கையின் தொழிற்பாட்டிற்கான தசைவகை யாது?

இங்கே மடிக்கவும்



# க.பொ.த சாதாரணதரம் மாதிரிப் பரீட்சை

## கணிதம் I



மாணவர் மலர்

1. 7 ஒரு முதன்மை எண்ணாக இருப்பதற்கான காரணத்தை எழுதுக?
2. பக்க நீளம் 6 cm ஆகவுள்ள சமபக்க முக்கோணியொன்றின் சுற்றளவைக் காண்க?
3. உருவில் நிழற்றிய பகுதியைத் தொடைக் குறிப்பீட்டில் தருக?



4. 5,9,13,17,21..... என்ற எண்கோலத்தின் அடுத்துள்ள எண்ணை எழுதுக.
5. 79 × 25 = 1975 ஆகும். 7.9 × 0.25 இன் பெறுமானம் யாது?
6. உருவில் தரப்பட்டுள்ள இரு சமபக்க முக்கோணி ABC இல் $\hat{A}=50^0$ எனின், B இன் பெறுமானம் என்ன?



7. $\Downarrow$ , IIII என்ற வரவுக்குறி காட்டும் எண் பெறுமானம் என்ன?
8. செவ்வகத்தினதும், சதுரத்தினதும் ஒத்த இயல்பொன்றை காண்க?
9. அரச இலச்சினையில் உள்ள கேத்திர கணித வடிவமொன்றைக் குறிப்பிடுக?
10. 79 ஆவது சதுர எண் ஒற்றை எண்ணா? இரட்டை எண்ணா?
11. x/3+5=9 எனின், X பெறுமானம் காண்க?
12. $(X = 1/x)^2=3$ எனின் $X^2+1/X^2$ இன்பெறுமானத்தைக் காண்க?
13. தரப்பட்டுள்ள தண்டு இலைக் குறிப்பில் உள்ள எண்களின்

| தண்டு | இலை |
|---|---|
| 2 | 3,5,5,8 |
| 3 | 1,2,7,9 |

1. ஆகாரம்,யாது,? 2. இடையம் யாது?
14. x/2 இன் நிகர்மாற்றின் பெறுமானம் 4 எனின் X இன் பெறுமானத்தை காண்க?
15. ஒரு குறித்த மகளிர் பாடசாலையொன்றில் தரம் 11 இல் 40 மாணவியர் உள்ளனர். அவர்களில் இருந்து வகுப்புத் தலைவியும், கணித பாடத்தலைவியும் எழுமாறாகத் தெரிவுசெய்யப்படின், ஒரே மாணவி இரு பதவிகளையும் பெறுவதற்கான நிகழ்தகவு யாது.
16. a+b=x
a-b=y எனின் சமன்பாடுகளைத் தீர்க்காது, $a^2-b^2$ இன் பெறுமானத்தை X,Y இல் தருக?
17. 2301 (ஐந்து) என்பது அடி நான்கில் உள்ள எண்ணாகும். இதில் 1,3 ஆகியவற்றால் காட்டப்படும் எண்களின் பெறுமானங்களுக்கு இடையிலான விகிதத்தை அடி பத்து எண்ணில் தருக?
18. வட்டிக்கு கடன் கொடுக்கும் ஒருவன், வட்டி வீதம் 20% எனக் கூறி, ரூபா 100 கடன் பெறும் ஒருவனிடம் முதல்மாத வட்டியாக 20 ரூபாவை வைத்துக்கொண்டு ரூபா 80 ஐ அவரிடம் கொடுக்கிறான். இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையில் அவர் அறவிட்ட வட்டி வீதம் எவ்வளவு?
19. ஒரு குறித்த தொகையான வண்டுகள், ஒரு வண்டிற்கு ஒரு மலர் குறைவாகும். ஒரு மலரில் இரு வண்டுகள் வீதம் அமர்ந்தால், ஒரு மலரில் ஒரு வண்டு வீதம் அமர்ந்தால் ஒரு மலர் மிஞ்சியிருக்கும் எனின்,
i. மலர்கள் எத்தனை?
ii. வண்டுகள் எத்தனை?
20. உருவில் O வை மையமாககொண்ட வட்டத்தின் $\hat{OBC}=130^0$ எனத் தரப்பட்டுள்ளது. $\hat{ADB}$ யின் பெறுமானம் யாது?



21. செவ்வக வடிவான ஒரு காகிதத்தை நெடுக்காக சரிநடுவே இரண்டாக மடித்து அதனை விரிக்காமல் மேலும் தொடர்ந்து இவ்வாறு மடிக்கப்படுகின்றது.
1. இவ்வாறு 3 முறை மடித்தால் எத்தனை கலங்கள் உருவாகும்.
2. இவ்வாறு 10 முறை மடிக்கும்போது ஏற்படும் கலங்களின் எண்ணிக்கையை 2 இன் வலுவில் தருக.
3. ஒவ்வொரு மடிப்பின் போதும் பெறப்படும் கலங்களின் எண்ணிக்கையை ஒழுங்கு வரிசையில் எழுதும்போது பெறப்படும் தொடரி எவ்வகையைச் சேர்ந்தது என எழுதுக.
22. உருவில் தரப்பட்டுள்ள நேர்கோட்டு வரைபின்
1. படித்திறனை எழுதுக?
2. வெட்டுத்துண்டை எழுதுக?
3. வரைபின் சமன்பாட்டை Y=mx+c என்ற வடிவில் தருக?



23. இங்கு தரப்பட்டுள்ள சமபக்க முக்கோணியின் ஒரு பக்க நீளம் 2a ஆகும். A யின் இருசம கூறாக்கி BC ஐ D யில் வெட்டுகிறது. ΔABD, ΔACD களை ஒருங்கிசைவு படுத்துவதன்மூலம் BD=DC எனக் காட்டலாம்.
1. ஒருங்கிசையும் சந்தர்ப்பத்தை எழுதுக.
2. AD பக்கத்தின் நீளத்தின் a இல் தருக.
3. sin 60° = √3/2 எனக் காட்டுக.



24. உருவில் தரப்பட்டுள்ள பெரிய வட்டத்தின் ஆரை சிறிய வட்டத்தின் ஆரையிலும் இருமடங்காகும். பெரிய வட்டத்தின் பரப்பளவுக்கும் சிறிய வட்டத்தின் பரப்பளவுக்கும் இடையிலான விகிதத்தைக் காண்க.



25.



1. தரப்பட்டுள்ள உருவில் நிழற்றிய பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?
2. நிழற்றிய பகுதிக்கும் முழு உருவுக்கும் இடையிலான விகிதத்தை எளிய வடிவில் தருக?
3. நிழற்றிய, நிழற்றாத பகுதிகளுக்கு இடையிலான விகிதத்தை தசம பின்னமாக எழுதின் அது எவ்வகை தசமமாகும்.

26.



தரப்பட்டுள்ள உருவில் O வை மையமாகக் கொண்ட வட்டத்தின் AB விட்டமாகும். AC=CB ஆகுமாறு C பரிதியில் அமைந்துள்ளது.

1. BC இன் நீளத்தை ஆரை r இல் தருக?
2. △ ABC இன் சுற்றளவு $= 2r\ (\sqrt{2}+1)$ எனக் காட்டுக?

27. இங்கு காட்டப்பட்டுள்ள உபகரணத்தில் X ஐ இடும்போது அதன் வர்க்கமூலத்தின் நேர் பெறுமானம் வெளியே வரும்.




1. இந்த உபகரணத்துள் 81 என்னும் எண்ணை இடும்போது வெளிவரும் எண் என்ன?
2. 50 எனும் எண்ணை இடும்போது வெளியாகும் எண்ணை சேடுகளாக எளிய வடிவில் தருக.

28. இங்கு தரப்பட்டுள்ளவாறு ஒரு பாடசாலையின் இரு எல்லைகள் AB,BC ஆகும். இரு எல்லைகளுக்கும் AB இலிருந்து 3 m தூரத்திலும் இருக்குமாறு ஒரு கொடிமரத்தை நாட்டவேண்டிய இடத்தை தெரிவு செய்ய நீர் மேற்கொள்ளும் கேத்திர கணித செய்முறைபாட்டின்போது, வரையும் நேர் கோடுகளையும், விற்களையும் பருமட்டாக இங்கு வரைந்து காட்டுக.




29. கட்டட நிர்மாணங்களின்போது கிடை, நிலைக்குத்து, செங்கோணம் ஆகியவற்றை பரீட்சிப்பதற்காகப் பயன்படுத்தும் உபகரணங்களை முறையே எழுதுக?
கிடை .......... நிலைக்குத்து.............. செங்கோணம்.........

30. ஒரு வகுப்பில் உள்ள மாணவர்களிடம் அவர்களுக்கு விருப்பமான விளையாட்டுக்கள் யாதென வினவப்பட்டபோது பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு வரையப்பட்ட வென் உருவம் இங்கு தரப்பட்டுள்ளது.




1. வென் உருவில் A n B பகுதியை நிறந்திட்டுக?
2. தகவல்களின்படி எழுமாறாக ஒரு மாணவன் தெரிவுசெய்யப்படின் அவன் இரு விளையாட்டுக்களுக்குமே விருப்பமில்லாதிருப்பதற்கான நிகழ்தகவு யாது?
3. இந்த மாணவர்களின் நிறைகளின் இடை 48 Kg எனின், எல்லா மாணவர்களினதும் மொத்த நிறை யாது?

## பகுதி II

அ. (கோளத்தின் கனவளவு $4/3\ \pi r^3$. கூம்பன் கனவளவு $1/3\ \pi r^2 h$. வட்டத்தின் பரிதி $2 = \pi r$. வட்டத்தின் பரப்பளவு $\pi r^2$. $\theta$ றேடியன் ஆகவிருக்கும்போது ஆரைச் சிறையொன்றின் பரப்பளவு $\theta/2\ r^2$ ஆகும்.)

1 1 1
1 2 1
1 3 3 1
1 4 6 4 1
1 5 - - 5 1

இந்த எண் கோலத்தில் ஒரு நிரையில் உள்ள எண்கள் அதற்கு மேல் உள்ள நிலையைத் தொடர்படுத்திப் பெறப்பட்டுள்ளன.

1. இந்த எண்கள் எந்தக் கேத்திர கணித வடிவில் அமைந்துள்ளன.
2. இடைவெளிக்குப் பொருத்தமான இரு எண்களையும் எழுதுக.
3. மூன்றாம் நிலையில் உள்ள எண்களினால் $(a+b)^2$ என்ற கோவையின் விரிவின் உறுப்புக்களின் குணகங்கள் கிடைக்கும். இதன்படி 4 ஆம் நிரையைப் பயன்படுத்திக் கீழே உள்ள இடைவெளிகளை நிரப்புக?
$(a+b)^3 = a^3 + .............. a^2b + ..............+ ......................$

ஆ. உருவில் தரப்பட்டுள்ள சரிவகம் ABCD இல் AB//DC, AB= 14 cm உம் DC 20 cm உம் ஆகும். AB ஐ விட்டமாகக் கொண்டு அரை வட்டம் வரையப்பட்டுள்ளது. DC அந்த வட்டத்தின் தொடலியாகும்.




01. சரிவகத்தின் இரு சமாந்தரக் கோடுகளுக்கு இடையிலான செங்குத்துத் தூரத்தைக் காண்க.
02. சரிவகத்தின் பரப்பளவைக் காண்க.
03. உருவில் நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் காண்க

இ. $\dfrac{8}{5-3x} = 4$

01. மேலே உள்ள சமன்பாட்டிற்கான பாய்ச்சற் கோட்டுப் படத்தை வரைக.
02. அப்பாய்ச்சற் கோட்டுப் படத்திற்கான நேர்மாறு பாய்ச்சற் கோட்டுப் படத்தை வரைந்து அதன் மூலம் x இன் பெறுமானத்தைக் காண்க.

ஈ. உருவில் இணைகரம் ABCD இல் BC = CE ஆகுமாறு பக்கம் BC, E வரை நீட்டப்பட்டுள்ளது.




1. $\triangle ABC \equiv \triangle DCE$ எனக் காட்டுக.
2. ACED ஓர் இணைகரம் எனக் காட்டுக.
3. உருவின் பரப்பளவில் சமனான இரு இணைகரங்களைக் காரணம் காட்டிப் பெயரிடுக.

உ. 1,2,3,4,5 என இலக்கமிடப்பட்ட ஒரே வடிவமான 5 அட்டைகள் ஒரு பையில் உள்ளன. எழுமாறாக ஒரு அட்டை எடுக்கப்பட்டு அதன் இலக்கம் குறிக்கப்பட்ட பின் மீண்டும் பையில் இடாது எழுமாறாக மேலும் ஓர் அட்டை எடுக்கப்படுகிறது. முதலாம் அட்டையில் உள்ள இலக்கம் பத்தாமிடத்து இலக்கமாகவும் இரண்டாம் அடையில் உள்ள இலக்கம் முதலாமிடத்து இலக்கமாகவும் அமையுமாறு ஒரு எண் ஆக்கப்படுகிறது. இங்கு கிடைக்கும் மாதிரி வெளி பூரணப்படுத்தப்படாத அட்டவணையில் கீழே காட்டப்பட்டுள்ளது.




1. புள்ளி வரைபைப் பூரணப்படுத்துக.
2. இரு இலக்கங்களினாலும் ஆக்கப்படும் எண் ஒற்றை எண்ணாக இருக்கும் நிகழ்ச்சியை A எனக் குறிப்பிட்டு P (A) ஐக் காண்க?
3. ஆக்கப்படும் எண் 40 இலும் அதிகமாக இருப்பதற்கான நிகழ்ச்சியை B எனப் பெயரிட்டு P (B) ஐ எழுதுக?
4. n(AnB) ஐ எழுதுக?

இங்கே மடிக்கவும்



ஊ. ஒரு வகையான ஊதுபத்திகள் கொண்ட பெட்டியில் 25 ஊதுபத்திகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையான ஊதுபத்திகள் அடங்கிய பெட்டிகளின் மாதிரியொன்றிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| ஒரு பெட்டியில் உள்ள பத்திகள் | பெட்டிகளின் எண்ணிக்கை | திரள் மீடிறன் |
|---|---|---|
| 22 | 3 | |
| 23 | 5 | |
| 24 | 7 | |
| 25 | 13 | |
| 26 | 6 | |
| 27 | 5 | |

1. திறள் மீடிறன் நிரலை நிரப்புக.
2. பரம்பலின் இடையத்தைக் காண்க.
3. முதலாம், மூன்றாம் காலணைகளைக் காண்க.
4. காலணையிடைவீச்சைக் காண்க.

02.
அ. Sn = n/2 (n+1)
கூட்டல் விருத்தியொன்றின் n உறுப்புகளின் கூட்டுத்தொகையைக் காண மேலே தரப்பட்டுள்ள வாய்ப்பாடு பயன்படுத்தப்படும்.
1. n =10 ஆகும்போது விருத்தியின் கூட்டுத்தொகை யாது?
2. n = 9 n=8 ஆகும்போது Sn இன் பெறுமானத்தைக் காண்க?
3. விருத்தியின் 10 ஆம் உறுப்பையும், 9 ஆம் உறுப்பையும் கண்டு பொது வித்தியாசத்தைக் காண்க.
4. Sn=28 ஆகும்போது n இன் பெறுமானத்தைக் காண்க.

ஆ. 5,15,45 ........ என்ற பெருக்கல் விருத்தியில்
1. 7 ஆம் உறுப்பைக் காண்க.
2. முதல் 7 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகையைக் காண்க.

03.
அ. சுமன் தனது நண்பனான நிமாலுக்கு பின்வருமாறு கூறுகிறார். இரு இலக்கங்களினாலான ஓர் எண்ணை நினை. இப்போது அந்த இரு இலக்கங்களையும் இடம் மாற்றுவதால் வரும் எண்களையும் நினை. இரு எண்களினதும் வித்தியாசத்தைக் கண்டால் அந்த எண்ணின் இலக்கச் கூட்டி 9, உதாரணமாக 57 ஐ எடுத்து இச் செய்கையைப் பின்வருமாறு காட்டலாம்.

$57 \rightarrow 75 \rightarrow (75-57) = 18$

1. 18 இன் இலக்கச்சுட்டி யாது?
2. நீர் விரும்பும் இரு இலக்கங்களினாலான ஓர் எண்ணை எடுத்து மேலே காட்டிய செய்கையைச் செய்து இலக்க சுட்டி 9 எனக் காட்டுக.
3. எண்ணொன்றின் இரு இலக்கங்கள் X உம், Y உம் எனக் கொண்டு எண்ணை எழுதுக. (முதலாம் இடத்து எண் Y எனக் கொள்க)
4. அதன் இலக்கங்களை இடம்மாற்றும்போது பெறப்படும் எண்ணை எழுதுக. அது 3 இல் குறிப்பிடப்பட்ட எண்ணைவிடப் பெரியது எனக் கொண்டு கழிக்கும்போது வித்தியாசம் 72 ஆயின் Y-X=8 எனக் காட்டுக.

ஆ. 1. $4^{x-3} = 64$ எனின் x இன் பெறுமானத்தைக் காண்க.
2. மேலே உள்ள சமன்பாட்டை மடக்கை வடிவில் தருக.

04.
அ. காரணிப்படுத்துக 3a3+24
ஆ. வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி அல்லது நிறைவர்க்கமாக்கித் தீர்க்க $x^2+5x+3=0$
இ. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க. $\sqrt[3]{23.57}$

05.
அ. ரூபா 18 500 பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டியொன்றை வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கும் போது முற்பணமாக ரூபா 6500 செலுத்தவேண்டும். மிகுதியை 15 சம மாதத் தவணைக் கட்டணங்களைச் செலுத்தவேண்டும். இதற்காக எஞ்சிய தொகைக்கு 25 வீத வட்டியும் அறவிடப்படும்.
1. தவணைக்கட்டணங்களாகச் செலுத்த எஞ்சியிருக்கும் தொகை யாது?
2. ஒரு மாதத்தில் செலுத்தும் கடன் தொகையின் பகுதி எவ்வளவு?
3. மாதாந்த அலகுகள் எத்தனை.
4. ஒருமாத அலகுக்கான வட்டி எவ்வளவு.
5. மொத்த வட்டி எவ்வளவு.
6. மாதாந்தக் கட்டணம் எவ்வளவு.
7. தொலைக்காட்சிப் பெட்டிக்குச செலவான மொத்தப் பணம் எவ்வளவு.
8. தொலைக்காட்சிப் பெட்டியை உடன் காசுக்கு வாங்குவதாக இருந்தால், 5 வீத கழிவு வழங்கப்படும. வாடகைக் கொள்வனவு முறையில் வாங்கும் போது மேலதிகமாகச் செலுத்தும் தொகை யாது?

06. $Y=2x^2-3$ என்ற வரைபை வரைவதற்குத் தயார் செய்யப்பட்ட பூரணமற்ற ஓர் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 15 | 5 | | | -1 | | 15 |

அ. இந்த அட்டவணையில் இடைவெளிகளை நிரப்புக?
ஆ. X அச்சு வழியே 10 சிறிய சதுரங்களை 1 அலகுகளாகவும், y அச்சு வழியே 10 சிறிய சதுரங்களை 2 அலகாகவும் எடுத்து இவ்வரைபை வரைக.
இ. உமது வரைபைப் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் காண்க.
1. சமச்சீர் அச்சின் சமன்பாடு.
2. திரும்பற் புள்ளியின் ஆள்கூறு.
3. சார்பின் பெறுமானம் மறையாகும் ஒ இன் பெறுமான வீச்சு.
4. $2x^2-x-4=0$ $Y=2x^2-3$ என்ற சமன்பாட்டின் மூலகங்கள் ஆகியவற்றைக் காண்க.

07. ஒரு மாணவன் $60^0$ யை அமைத்தவிதம் இங்கு சிறிதாக்கப்பட்ட அளவிடையில் காட்டப்பட்டுள்ளது.




1. மாணவன் அமைத்துள்ள கோணத்தின் உச்சியைப் பெயரிடுக.
2. மேலே உள்ள தரவுகளின் அடிப்படையில் இக்கோணத்தை அமைக்க அதனை CAB எனப் பெயரிடுக.
3. நேர்கோடு AC நாண் ஆக அமையும் வட்டத்தின் மையம் அமையும் நேர்கோட்டை அமைக்க.
3. AC நாண் ஆகவும் பக்கம் AB ஐ A இல் தொடுவதுமான வட்டத்தின் மையத்தைக் கண்டு அதனை O எனப் பெயரிடுக.
5. மேலே உள்ள வட்டத்தை வரைந்து அளந்து எழுதுக.

ஆ. ஒரு வகுப்பில் 35 மாணவர்கள் உள்ளனர். அவர்களுள் 23 பேர் கிரிக்கெட் விளையாட்டிற்கும் 19 பேர் எல்லே விளையாட்டிற்கும் விருப்பம் எனக் கூறினர், 5 பேர் இந்த இரண்டில் ஒன்றிற்கும் விரும்பம் இல்லை எனக் கூறினர்.
1. தரப்பட்ட தரவுகளை வென் உருவில் காட்டுக.
2. இரு விளையாட்டுக்களையும் விரும்பும் மாணவர் எத்தனை பேர்.

8. அ. பாடசாலையொன்றின் தரம் 11 மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகள்தொடர்பான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| வகுப்பாயிடை | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 | 50-60 | 60-70- | 70-80 | 80-90 | 90-100 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் | 3 | 5 | 8 | 12 | 13 | 15 | 10 | 8 | 4 | 2 |

1. இத்தரவுகளின் ஆகாரம் அடங்கும் வகுப்பு யாது?
2. ஆகார வகுப்பின் நடுப்பெறுமானத்தை எடு கொண்ட இடையாகக் கொண்டு புள்ளிகளின் இடையைக் காண்க.
ஆ. கூம்பின் விட்டமும் சாயுயரமும் சமன் ஆகும். அது $e = 7\sqrt{3}$ cm




1. உருவில் தரப்பட்டுள்ள தரவுகளின் படி h இன் பெறுமானத்தைக் காண்க.
2. கூம்பின் கனவளவைக் காண்க.

...மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P

# மணிவிழா சிறப்புமலர்

...ர்ச்சகர்களின் நிறுவகம் அவர்களின்

...வோம்

...தமிழர் நாடாம்
...ழிக்கச் செய்து
... உறைவிடமென
... சூழலில்
...சின்னங்கள்
...து அமைதியானது
...மதி நிலைத்திட
...ணும்
...கந்தகுருக்கள் -
...அம்மா
...விழாவில்
... வாழ்த்துகிறோம்.

...வாழ்த்துவோர்

... -
...உடுப்பிட்டி
...ம்மன் கோயில் வதிரி
...கள்
...ட்டி
...ள் (துரை அய்யா)
... புலோலி தெற்கு புலோலி
... வல்வெட்டித்துறை
... வல்வெட்டித்துறை
...ள்
... தம்பசிட்டி பருத்தித்துறை
...க்கள் (வரதய்யா)
...ந்திரன்
...ன் குருக்கள் -
...ரதமகுரு
...க்கள் பிரதமகுரு
...யார் கோயில்
...க்கள் பிரதமகுரு

...கிறோம்



...துறைப் பகுதியில் உள்ள
...தம குருவான ஸ்ரீ தண்ட
... சிஷ்யர்கள் அனைவரும்
... பூர்த்தி மணிவிழாவைச்
...த் தொடர்ந்து ஒரு சிறப்பு
... அம்மலரிற் சிறந்த பக்த
...ன்மீக அநேக விஷயங்க
...ம் வெளியிட இருப்பதையு
...ள் மிக்க மகிழ்ச்சியடைந்
...றப்பாக நடந்து மலரும்
... அமைந்து ஸ்ரீ தேசிகரும்
... செய்துகொண்டு பரமேஷ
... ஆசார்ய ஸ்வாமிகள் அரு
...ழ்த்துச் செய்தி தெரிவிக்

...சிகர் பிரதம குரு
...ல்

...ரிய சுவாமிகள்



## மணிவிழா வாழ்த்து

வல்வெட்டித்துறை அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் ஐயாவின் மணிவிழா 24.11.2004 அன்று நடைபெற விருப்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். புலோலியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, புற்றளை மகா வித்தியால யம், வேலாயுதம் மகா வித்தியாலயம், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளிலே கல்வி கற்றார். 1963 ஆம் ஆண்டில் ஆச்சாரிய அபிஷேகம் பெற்றார். 1965 ஆம் ஆண்டில் மகாவள்ளி அம்மா அவர்களைத் திருமணம் செய்தார்.

ஐயா அவர்கள் பெருந்தொகையான ஆலயங்களின் கும்பாபிஷேகங்களைச் செய்துள்ளார். பல ஆலயங்களுடைய மகோற்சவங்களை நடாத்தியுள்ளார். 18 ஆசாரிய அபிஷேகங்களைச் செய்துள்ளார். அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் தலைவராய் பத்தொன்பது ஆண்டுகள் (1983 - 2002) பணி செய்துள்ளார்.

இவர் செய்கின்ற ஆராதனை அபிஷேகங்கள் பற்றி மக்கள் மிகுந்த பக்தியுடனும் உவகையுடனும் கூறுவார்கள். முத்துமாரி அம்பாளுக்குச் சிவஸ்ரீ தண்டபாணிகதேசிகர் ஐயா பக்திபொங்கும் அழகொழுகும் ஆராதனைகளை முப்பொழுதும் செய்வதைக் காணும் பாக்கியத்தை இந்த மக்கள் பெற்றுள்ளனர்.

சிவஸ்ரீ தண்டபாணிக தேசிகர் ஐயா வாழ்வின் ஒரு சுற்றாகிய 60 ஆண்டுகளை நிறைவுசெய்து அடுத்த சுற்றுக்குள் நுழைகிறார். அவர் அவர் எப்பொழுதுமே சுறுசுறுப்பாக இருப்பவர். எல்லா விழாக்களிலும் கூட்டங்களிலும் தவறாமல் பங்குகொள்வார். பொலிவான தோற்றமுடைய அவர் இன்றுபோல் என்றுமிருக்கவேண்டும். அவருக்கு ஷஷ்டியப்த பூர்த்தி என்று கூறினால் நம்பமுடியாது. அத்தகைய எழிலுடைய பொலிவுள்ள தோற்றம் ஐயாவும் அம்மாவும் நீண்ட ஆயுளும் எல்லா நலன்களும் பெற்று அம்பாளுடைய திருமேனி முப்போதும் தீண்டும் பேறு நீண்டு செல்லப் பார்வதி உடனுறை பரமேசுவரனை வேண்டுகிறேன்.

மணிவிழா நாயகன் - நாயகியின் ஆசிகளை வேண்டி இந்த வாழ்த்துரையை நிறைவு செய்கிறேன்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர் /தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வாழ்த்துச் செய்தி

வேதாரணிய குரு பரம்பரைச் சைவக் குருமார் அர்ச்சகர்களின் நிறுவகத்துக்குரிய சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (சிவாச்சாரிய பீடாதிபதி அகில உலக சைவக் குருமார் சம்மேளனம்) அவர்களுடைய மணிவிழா நடைபெற இருப்பதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். வல்வை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயிலின் பிரதம குருவாகிய இவர் புலோலி சோமாஸ்கந்த குருக்களினதும் செல்லாச்சி அம்மாவினதும் அருந்தவப் புதல்வராவார். வல்வை கம்பர்மலை திக்கம் மந்திகை முதலான இடங்களில் அமைந்துள்ள ஆலயத் திருத்தலங்களில் கும்பாபிஷேகம் மற்றும் ஆலய உற்சவங்களைச் சிறப்புற நடாத்திப் பக்தர்களுக்கு ஆன்மீக உணர்வையூட்டிவரும் இவர் சமூகப் பணிகளிலும் சிறப்புற ஈடுபட்டு வருபவர். இதனால் சமாதான நீதிவானாகவும் இவர் பதவியேற்றமை மிகவும் பொருத்தமானதாகக் கொள்ளத்தக்கது. அன்னாருக்கும் இவர்வழி செல்லும் இவரது குடும்பத்தினருக்கும் நீண்ட ஆயுளை வழங்க இறைவனை வேண்டுகிறேன். இவரது ஆன்மீக சமூகப் பணிகள் தொடர வாழ்த்துகிறேன்.

ஆ.சிவசுவாமி
மேலதிக அரச அதிபர்
யாழ்ப்பாணம்.

## வணங்கி வாழ்த்துகிறேன்

வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுருக்களான சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் அவர்களின் மணிவிழா நடைபெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 43 வருடங்களாகச் சிவப்பணி செய்துவரும் தேசிகர் அவர்கள் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென இந்த வேளையில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வேதாகம உபநிடதத் தொண்டும், கிரியை பலவற்றின் விளக்கமும் கைவரப்பெற்ற தேசிகர் அவர்கள் ஆலயப் பணியுடன் நில்லாமல் எல்லாவிதமான சைவசமயப் பணிகளையும் செய்து வருகின்றார் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இவர் சைவப் பணியில் ஆற்றிவருகின்ற பெருந்தொண்டுகளால் சைவ உலகத்தில் வரவேற்கப்பட்டு வருகின்றார். இவருடைய ஒப்பற்ற பணி காரணமாகவே அகில உலக சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் தலைவராக 19 ஆண்டுகள் சேவைசெய்து தற்போது அதன் போஷகர் என்ற மதிப்போடு போற்றப் படுகின்றார். அத்துடன் அகில உலக சைவக் குருமார் சம்மேளனத்தின் தலைவராகவும் தேசிகர் அவர்கள் விளங்கிச் சமய வளர்ச்சிக்கு அளப்பரிய தொண்டாற்றி வருகின்றார்.

தேசிகர் அவர்கள சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த புலமை மிக்கவர். சைவத்தின் பெருமையை மக்களிடையே பரப்புவதில் அவர் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டவர். சைவ சமயத்தைப் பற்றிய அவருடைய விளக்கங்கள் இன்றைய தலைமுறைக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைந்துள்ளது எனப் பலரும் பாராட்ட நான் கேட்டு மகிழ்ந்திருக்கின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் சைவத்தையும், தமிழையும் சிறப்பாக வளர்ப்பதற்கான வழிகாட்டிகள் தேவைப்படுகின்றார்கள். இந்தச் சூழலில் இவை இரண்டையும் வளர்ப்பதில் தேசிகர் அவர்கள் ஆற்றிவரும் பணி எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியதாகும். மணிவிழாக் காணும் இவர் இந்தப் பணியினைத் தொடர்ந்து செய்து பவளவிழா அமுதவிழா நூற்றாண்டு விழாக்கள்காண வேண்டுமென மனதார இறைவனை வேண்டுகிறேன்.

தேசிகர் அவர்கள் எல்லா மக்களையும் நேசிப்பது போலவே தனது குடும்பத்தாரையும் மிகவும் அன்போடு நேசிக்கின்றவர் என்பதை அவரைத் தெரிந்த எல்லோரும் அறிவர். அவரது துணைவியார் மகாவள்ளி அம்மாவுடனும் குடும்பத்தாருடனும் சகல சௌபாக்கியங்களும் பெற்று அவருடைய பணியை மென்மேலும் தொடர்ந்து அவர் இனிதே மகிழ்ந்து வாழவேண்டும் என எல்லாம்வல்ல ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானை வணங்கி வாழ்த்துகிறேன்.

எல்லா மங்களமும் உண்டாகுக. சுபம் - மங்களம்.

கு.பத்மநாதன்
அரசாங்க அதிபர்
யாழ்.மாவட்டம்.

## வாழ்த்துகிறோம்

வாழ்க வாழ்க வாழ்கவே - தண்டபாணி
தேசிக குருக்கள் என்றென்றும் வாழ்கவே
குழந்தை உள்ளம் படைத்தவராம் மலர்ந்த முகம் கொண்டவராம்
தெருக்கள் எல்லாம் தேசிக குருக்கள் நாமம் பாடுதையா
கள்ளமில்லா உள்ளங் கொண்ட வெள்ளை மன வேதியரே
குவலயத்தில் குழந்தையாய் தவழ்ந்து அவனியதில் அரும்பணி
செய்தவரே
தெய்வத்தின் திருவடி தேடி நல்வழி தந்த வள்ளலே
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திடும மெய்யரசே
இல்லாமை என்ற சொல்லை இல்லாது ஒழித்த ஐயனே
கொல்லாமை, புலான், குடி எல்லாமே தவறு என்று உணர்ந்திட்ட
தேசிகரே
வல்லமை என்றும் பெற்று மனை மக்களுடன்
வளமுடன் வாழ்ந்திடுவீர்
மணி விழா காணும் எங்கள தவ மன்னரே
நூற்றாண்டு விழாவிலும் நீர் சிறப்புடன் சேவை செய்ய
சுற்றம் சூழ சுந்தரராய் நீர் ஒளி பெற்றிட சங்கரனை
வேண்டுகின்றேன்.

கார்த்திகேசு பஞ்சரத்தினம்
ஜனசக்திக் காப்புறுதி நிறுவன பிரதேச முகவர்
நமது ஈழநாடு பிரதேச முகவர்.

# ஈழத்தமிழருக்கு பெருமையைப் பெற்றுக் கொடுத்த தியாகி திலீபன், அன்னை பூபதியின் தியாக மரணங்கள்!

அரசியல் தலைவர்களும், அரசியல் பிரமுகர்களும் தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காகச் சாத்வீகப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். ஒரு மெழுகுவர்த்தியைப் போல தன்னை உருக்கி, தனது துன்பங்களை மற்றவர்களுக்கு உணரச் செய்து மற்றவர்கள் மனதில் கருத்து மாற்றத்தை ஏற்படுத்தித் தனது நியாயபூர்வமான கோரிக்கைகளை மற்றவர்களுக்கும் ஏற்படச்செய்து, தனது நோக்கை வென்றெடுப்பதே ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தின் நோக்கமாகும். இந்தப் போராட்டத்தின் உச்சகட்டமாக - சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை உலகில் பல பாகங்களிலும் வாழும் அரசியல் பிரமுகர்கள் பின்பற்றி இருக்கிறார்கள்.

ஆந்திர மாநிலத்தைப் பிரித்துத் தரும்படி, பொட்டி ஸ்ரீராமுலு சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயரிடக்கோரி, சங்கரலிங்க நாடார் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார் இவர்கள் இருவருமே தமது போராட்டத்தின் இறுதியில் மரணத்தைத் தழுவிக் கொண்டனர். ஆனால் தெலுங்கு தேசமக்கள் மத்தியில் பொட்டி ஸ்ரீராமுலு ஊட்டிய தேசியவாத உணர்ச்சி அணைந்து விடவில்லை. அது நீறு பூத்த நெருப்பாகவே இருந்தது. தெலுங்கான போராட்டமும் பின்னர் என்.டி.ராமாராவ் தலைமையிலான தெலுங்கு தேசக் கட்சியும், அன்று பொட்டி ஸ்ரீராமுலுவின் தியாக மரணத்தின் கட்டுமானத்தில் வளர்க்கப்பட்டவையாகும். இதேபோல சென்னை மாநிலத்தை தமிழ்நாடு என்று அறிஞர் அண்ணா தலைமையிலான அரசு, பெயர் சூட்டுவதற்குக் காலகோளாக அமைந்திருந்தது சங்கரலிங்க நாடாரின் உயிர்த்தியாகமேயாகும்.

இதேபோல ஐரிஷ் விடுதலைப் போராட்டத்தில், பிரித்தானியரால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட பொபிசாண்ட்ஸ் சிறையில் தம்மை அரசியல் கைதியாக மனிதாபிமானத்துடன் நடத்துமாறு கோரி, சிறைக்குள்ளேயே சாகும்வரை உண்ணாவிரதமிருந்தார். அவர் சிறையிலேயே மரணத்தைத் தழுவிக் கொண்டாலும், ஆயுதப் போராளியான பொபிசாண்ட்ஸ் ஊட்டிய தேசிய உணர்வு இன்று ஐரிஷ் விடுதலைப் போராளிகளது துப்பாக்கிகளினூடாகக் கனன்று கொண்டேயிருக்கிறது.

ஆனால், இவர்கள் எவருமே படைத்திராத ஒரு தனித்துவமான வரலாற்றுச் சிறப்பை விடுதலைப் புலிகளின் முன்னால் அரசியற்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் திலீபன் படைத்தான். ஆயுதப்போராளியான திலீபன் அரசுடன் களங்களிலேயே ஆயுதங்களுடன் மோதிய திலீபன், இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட்ட போது, அந்தக் காலகட்டத்தில் நிலவிய அரசியல் சூழ்நிலைகளை அனுசரித்து ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினான் போராட்ட வடிவங்கள் மாறலாம். போராட்ட இலட்சியம் மாறாது என்று தலைவர் வே.பிரபாகரனின் சுதுமலைப் பிரகடனத்துக்கு திலீபன் செயல் வடிவம் கொடுத்தான்.

விடுதலைப்புலிகள் வித்தியாசமானவர்கள் என்று திலீபன் அடிக்கடி சொல்வார். அதற்கேற்ப திலீபனும் உண்ணாவிரதப் போராட்டத்தை இதுவரை உலகிலே எவரும் செய்யாத முறையில் செய்து காட்டினார். அதாவது, உண்ணாவிரதம் இருந்த நேரம் தொடக்கம் தான் இறக்கும் கடைசி நிமிடம் வரை ஒரு துளி நீர்கூட அருந்தாது, உண்ணாவிரதப் போராட்டத்துக்குப் புது பரிணாமம் கொடுத்து, திலீபன் தியாக மரணமடைந்தார்.

இப்படி ஒரு சாதனையை உலகிலே யாரும் படைத்ததில்லை. இதனால்தான் அவரது தியாகத்தின் எதிரொலி, இன்று தென்கிழக்காசியா தொடக்கம் ஐரோப்பிய நாடுகள் வரை தமிழர் விடுதலைப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உணர்த்தி நிற்கிறது.

இதேபோல, இந்திய அரசுக்கு எதிராக 1988 ஆம் ஆண்டு காலகட்டத்தில் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். விடுதலைப் புலிகளுடன், இந்திய மத்திய அரசு நிபந்தனையற்ற யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும், அதைத் தொடர்ந்து நிபந்தனையற்ற முறையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, இலங்கைப் பிரச்சினைக்கு இலங்கை வாழ் தமிழ்ப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை உருவாக்க மத்திய அரசு முயல வேண்டும் என்பது, அவரது இரண்டு கோரிக்கைகளாகும். அன்னை பூபதி ஒரு அரசியல்வாதியுமல்ல, ஆயுதப் போராளியுமல்ல. அவர் சாதாரண குடும்பப் பெண். அவரது கோரிக்கைகள் தமிழ்ப் பொதுமக்களின் ஏகோபித்த கருத்தின் வெளிப்பாடு என்பதோடு, தமிழ்ப் பொதுமக்களின் நியாயபூர்வமான போராட்டத்தின் குறியீடாகவும் அமைந்தது. வன்னிக் காட்டிலும், நித்திகைக் குளத்திலும் இடம்பெற்று வந்த தமிழீழ விடுதலைப்போராட்ட மையத்தை தமிழ்மக்கள் மத்தியில் அன்னை பூபதி கொண்டு வந்தார். ஆயுதப் போராட்டத்தில் நியாயத்தன்மையை அவரது சாத்வீக போராட்டம் நியாயப்படுத்தியதோடு, அதனை ஒரு வெகுஜன எழுச்சிப் போராட்டமாகவும், பிரதி விம்பப்படுத்தியது. உண்ணாநோன்பை அன்னை பூபதி 19-03-1988 இல் ஆரம்பித்தார். சரியாக ஒருமாத காலத்தின் பின்னர் 19-04-1988 இல் அவர் தியாக மரணமடைந்தார். உலகிலேயே அரசியல் போராட்டம் ஒன்றில் நீர்கூட அருந்தாது, உண்ணாவிரதம் இருந்து, உயிர்துறந்த முதல் பெண்மணி என்ற பெருமையையும் அன்னை பூபதி பெற்றார்.

தியாகி திலீபனதும், அன்னை பூபதியினதும் தியாக மரணங்கள் உலக வரலாற்றில் யாருக்குமே கிடைக்காத பெருமையை, ஈழத்தமிழர்களுக்கு பெற்றுக் கொடுத்தது. ஆந்திராவில் பொட்டி ஸ்ரீராமுலுவின் தியாக மரணத்தால் ஏற்பட்ட எழுச்சியை எப்படிப் பிரதமர் நேருவால் கட்டுப்படுத்த முடியவில்லையோ, அதேபோல் திலீபனதும், அன்னை பூபதியினதும் தியாக மரணத்தால் உருவான தமிழர் எழுச்சியை நேருவின் பேரன் பிரதமர் ராஜீவ் காந்தியாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

அமைதிப்படை என்ற பெயரில் - வெள்ளைக் கொடியோடு, ஈழமண்ணிற்குள் காலடி எடுத்து வைத்தவர்கள், இரத்தக் கறைபடிந்த தமது கரங்களில், துப்பாக்கிகளைத் தலை கீழாகப் பிடித்தபடி, ஈழ மண்ணின் கடற்கரையைத்தாண்டி, இந்தியக் கரைகளில் கப்பல் கப்பல்களாகச் சென்று இறங்கினார்கள்.

கருத்துருவாக்கம்:
அருண்பிரசாத்

## தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் - 2004

தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்,
எதிரியின் பாசறையை
வெடி குண்டு கொண்டு தகர்த்தும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
உயிரினை ஈந்து
உடலினை உரமிட்டு
செங்குருதியால் வரலாறு படைத்து
தமிழீழ மண்ணெங்கும்
நினைவுச்சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய வேதங்களாய்
ஈழ மண்ணில் புது விதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

ஏன் இவர்கள் மாவீரர்கள்
தமிழ் இன விடிவிற்காய் மரணித்தவர்கள்
தேசம் தூங்கிய போது விழித்திருந்தவர்கள்
உணர்வுத் தீக்களை தமக்குள்ளே சிறை
போட்டவர்கள்.

தேச மக்களின் பாச பிணைப்புக்காக
தமது பாசங்களை பொசுக்கியவர்கள்
பள்ளிப் பராயத்தை, பள்ளித் தோழருக்காய்
பறிகொடுத்தவர்கள்
ஊரெல்லாம் உறங்கும் வேளை
உறக்கமின்றி விழித்தவர்கள்
எல்லை சுற்றி வெளிச்சிலையாய்
நின்றவர்கள்
தமது மக்களுக்காய் கால்களை,
கரங்களை
இழந்து நின்றவர்கள்.

- தமிழீழ மாவீரர் பணிமனை.

அரசியல் கட்டுரை...

கே.ரீ.கணேசலிங்கம்

# சமாதானத்துக்கான போரல்ல போருக்கான சமாதானம்

மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் தமிழர் வாழும் வடக்கு - கிழக்குப் பிரதேசத்துக்கான எந்தத் திட்டமிடலுமின்றித் தயார் செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் வடக்கு-கிழக்கு தனித்துவமான, தனியான, வேறுபட்ட பிரதேசம் என்பதை இந்த வரவு செலவுத் திட்டம் காட்டுகிறது.

மறுபக்கத்தில் வடக்கு - கிழக்கு எங்கும் மாவீரர் நினைவு நாள் நிகழ்வுகளும், வல்வெட்டித்துறையில் அப்பாவித்தனமாகக் கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்களின் நினைவுகளும் அதிகமான அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறு ஒரு பக்கம் தமிழர் தமது நிலத்தில் அதிக பாதிப்பையும், துயரத்தையும், பகிர்ந்து கொண்டிருக்கும் போது, அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் றிச்சட் ஆர்மிரேஜ் பேச்சுக்களைத் தொடங்குமாறு அரச தரப்புக்கும், புலிகள் தரப்புக்கும் அழுத்தம் கொடுத்துள்ளார்.

றிச்சட் ஆர்மிரேஜ் - பதவியை விட்டு விலகினாலும். கடந்த காலத்தில் தென்னாசியாவில் மட்டுமன்றி, இலங்கையின் வடக்கு-கிழக்கிலும் அதிக அக்கறையும், கவனமும் செலுத்தியவராகக் காணப்படுவதனால், அவரது அறிக்கைக்கு முதன்மையும், முக்கியத்துவமும் உண்டு. அவர் ஒரு அமெரிக்க ராஜதந்திரி அமெரிக்க நாட்டுக்குரித்தான விசுவாசியும் கூட அவரது வெளிப்பாடு அமெரிக்காவின் வெளிப்பாடாகவே உள்ளது.

இலங்கையின் யுத்த நிறுத்த உடன்பாடு நகரும் தறுவாயில் இருக்கும் போது, அமெரிக்க ஆட்சியாளர்கள் இலங்கையில் சமாதானம் நிலவவேண்டும் என விரும்புவது வேடிக்கையாகவே உள்ளது. சமாதானத்தின் இரண்டு தரப்பையும் சமமாக மதிக்கத் தவறும் அமெரிக்க அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளைக் கண்டித்தும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளமை, அதன் பாரபட்சமான உணர்வைப் புரிந்துகொள்ளப் போதுமானது.

ஆர்மிரேஜின் அறிக்கை ஜனாதிபதி, பிரதமர், எதிர்கட்சித் தலைவர் எல்லோருக்கும் அனுப்பப்பட்டதுடன், விடுதலைப் புலிகள் பயங்கரவாதத்தை பேச்சளவில் மட்டுமல்ல செயலிலும் கைவிடவேண்டுமெனக் கோரியுள்ளனர். அவரது பார்வையில் வடக்கு-கிழக்கில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் நிகழும் வன்முறைகளுக்கான நடவடிக்கைக்கு விடுதலைப்புலிகள் தான் காரணம் என்பது போல் தெரிகிறது. அந்த வகையான நடவடிக்கை எதனையும் நிகழ்த்திவிட்டு அரசாங்கமோ, மாற்றுக் குழுக்களோ அப்படியே இதுவரை நடந்துள்ளன. இலங்கையில் நிகழும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் விடுதலைப்புலிகள்தான் பொறுப்பு என்பது போல், காட்டிக் கொண்டு தமது அரசியல் விருப்புக்களையும், அபிலாசைகளையும் முழுமைப்படுத்தி வந்தனர். இதனை எல்லாம் இலங்கையில் இருப்பவர்களே கூறிவர அளவீடு செய்வதற்கு முன்பு அமெரிக்காவிலிருந்து தகவலும், அறிக்கையும் வெளி வந்துவிடும்.

அமெரிக்கர் ஒருவகைப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் சர்வதேச மட்டத்திலும், இலங்கை முழுவதும் விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்கள் நிரந்தரமானவையாகவும், அவையே காலம் காலமான யதார்த்தமானதாகவும் மாறிவிடுகின்றன.

எனவே ஆர்மிரேஜின் நடவடிக்கை இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் எதிர்க்



கட்சிக்குமானதென்பதைவிட விடுதலைப் புலிகளை இலக்காகக் கொண்டதென்றே கூறலாம். சாதாரணமாக யாரும் கூறலாம். இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளதென கருதலாம். அவ்வாறான தொனியில் ஆர்மிரேஜ் செயல்பட்டவராக காணப்பட்டாலும் அதுவே யதார்த்தமாகிவிடாது. காரணம் அமெரிக்கத் தரப்பின் பிரதான நோக்கம். சமாதான பூர்வமான இலங்கையை விசுவாசமாக நேசிப்பதல்ல மாறாக இந்த சமாதானம் தொடரவேண்டும். நிலையான பாதுகாப்பான அமைதியை சாத்தியப்படுத்தும் போக்கு தொடரவேண்டும். என்பதே அவர்களது பிரதான நோக்காக உள்ளது. அந்த நோக்கத்துக்கு விரோதமாக விடுதலைப் புலிகள் செயல்பட்டு விடக்கக் கூடாது என்பதில் அமெரிக்கர் அக்கறையாக உள்ளனர்.

விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் நிகழ்வுகளும் விடுதலைப் புலிகளின் தீர்க்கமான முன்னெடுப்புகளும் நிகழும் காலமாதலால் இந்தக் காலத்துக்கு முன்பாக அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஆர்மிரேஜ் வெளிப்படுத்தியுள்ளார். நீண்டகால அமைதியைக் கொண்டிருப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். அதனால் பிராந்திய சர்வதேச மட்டத்தில் அமெரிக்காவுக்கும் அதன் நேச சக்திகளும் அதிகமான இலாபமுண்டு.

இன்னோர் விதத்தில் பார்த்தால் அமெரிக்கரின் நகர்வு விடுதலைப்புலிகளை பயங்கரவாதம் எனக் கூறிக்கொண்டு எச்சரிக்கை விடுத்துக் கொண்டு சமாதானத்தை தக்க வைக்கலாமெனக் கருதுகின்றது போல் தெரிகிறது. விடுதலைப் புலிகளை மிரட்டி கட்டுப்படுத்தும் மேற்குலகப் பாணியை பல தடவை அமெரிக்கா கையாண்டு வந்துள்ளது.

உண்மையில் வடக்கு - கிழக்கில் நிகழும் வன்முறைகளுக்கு யார் பின்னணி என்பது வல்வெட்டித்துறை சம்பவத்தை வைத்துக் கொண்டு தீர்மானிக்க முடியும். மிக நீண்டகாலமாக விடுதலைப் புலிகள் மீது திணிக்கப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளும் வல்வெட்டித்துறை சம்பவம் சான்றாக உள்ளது. உண்மையில் வல்வெட்டித்துறையில் அப்பாவி இளைஞர் மீதான படுகொலை தெளிவான, கூட்டான திட்டமிடலுடன் மேற்கொள்ளப்பட்டதாகும். அடிப்படையில் முகாந்திரமற்ற குற்றச்சாட்டை எதிர்த்தரப்பு முன்வைத்த போது யதார்த்தமாக இதனை ஈ.பி.டி.பி.யினர் மேற்கொண்டனர் என்பது புலனாகிவிட்டது.

கிழக்கில் நிகழ்ந்துவந்த நிழல் யுத்தத்தை வடக்கிலும் தொட இலங்கை இராணுவம் அதனோடு கூட்டாக இயங்கும் மாற்று அமைப்புக்களும் முயன்று வருகின்றனர். இந்த யுத்தத்தால் தமிழர் பகுதிகள் மட்டுமன்றி தமிழர் தரப்பின் முதுகெலும்பை உடைக்கலாமென மாற்றுத் தரப்பு கருதுகின்றது. கிழக்கில் ஏற்பட்டது போன்று வடக்கிலும் நிகழ்த்தி அதனால் ஏற்படப்போகும் நெருக்கடிகளை பயன்படுத்தி ஒரு புதிய அரசியல் தளத்தையும் போக்கையும் உருவாக்குவதே இவர்களின் நோக்கம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புதிய உபாயங்களை வகுப்பதனால் போருக்குரிய தயார்ப்படுத்தலை இலங்கை இராணுவத்தரப்பு

(12 ஆம் பக்கம் பார்க்க)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்*
*மக்கட் பதடி எனல்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## கெட்டிக்காரன் புழுகுகள்...

கிழக்கு மாகாணத்தில் மீண்டும் ஓர் போர்ச்சூழலை உருவாக்கும் நோக்குடன், நன்கு திட்டமிட்டவகையில் ஒரு நெருக்கடி நிலையை அரசும் - அரச படைகளும் தோற்றுவிக்கும் முயற்சியில் தீவிரமாக ,அதேசமயம் ரகசியமாக மேற்கொள்ளத் தொடங்கியுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக நடைபெற்றுவரும் வன்முறை மற்றும் கொலைச் சம்பவத் தொடர்களின் பின்னணியில், மர்மமான முறையில் ஒரு மறைகரம் இருப்பதாகவும், கிழக்கில் அமைதியின்மையையும், அச்ச உணர்வையும் உண்டுபண்ணி அங்குவாழும் மக்களின் இயல்பு வாழ்வை குழப்பி அதன்மூலம் இராணுவ மற்றும் அரசியல் ரீதியிலான முரண்நிலையை வலுப்படுத்தி வடக்கு - கிழக்கு மக்களிடையே பிரதேச ரீதியிலான மோதல்களை உருவாக்கும் மூலோபாயத்துடன், அந்த மறைகரம் செயற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த மறைகரம் எது என்பது ஒன்றும் ரகசியமான விடயமல்ல. சமாதான விரோத பேரினவாத தமிழின அழிப்புச் சக்திகளின் நெறிப்படுத்தலில் இயங்கும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான இந்த இனவிரோத சக்திகளின் செயற்பாடுகள் ஒன்றும் புதுமையானவையும் அல்ல.

ஆனால், சமாதான முயற்சிகளில் ஏதோ பெரிய அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக கூறிவரும் அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நகர்வும் விடுக்கும் ஒவ்வொரு அறிக்கையும் சமாதானத்திற்கு அச்சுறுத்தலாகவும் எதிரானதாகவும் இருப்பதை ஆழமாகக் கவனிப்போர் அறிவர்.

ஒவ்வொரு தடவையும் முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து விளக்கமளிப்பதற்காக ஜனாதிபதி கூறிக்கொண்டு மேற்கொள்ளும் ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்தின் பின்னரும் சமாதானம் தொடர்பான முன்னேற்றகரமான அல்லது ஆக்கபூர்வமான நகர்வுகள் எதுவும் ஏற்பட்டதாக வரலாறு கிடையாது.

ஆனால், ஒவ்வொரு பயணத்தின் முடிவிலும் இராணுவ பலத்தை மேம்படுத்தவும், ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவும் விஜயம் செய்த நாடுகளுடன் பாதுகாப்பு மற்றும் இராணுவ ரீதியிலான உடன்பாடுகளைச் செய்துகொள்வதற்கான வாய்ப்புகள் குறித்து ஆராயத் தவறியதே கிடையாது.

இது அரசினதும் அதன் தலைவியான ஜனாதிபதியினதும் அமைதிமுயற்சி தொடர்பான அனைத்து கருத்துக்களையும், நகர்வுகளையும் முற்றாகச் சந்தேகிக்கவே வைக்கிறது என்றால் அதற்கான பொறுப்புக்களை அவர்களே ஏற்கவேண்டும்.

கிழக்கில் கருணா விவகாரத்தைப் பயன்படுத்தி அரசியல் மற்றும் இராணுவ ரீதியிலான ஆதாயங்களைப் பெற பகீரதப் பிரயத்தனம் செய்த அரசு அதில் படுமோசமான ஏமாற்றத்தையும் தோல்வியையும் கண்ட நிலையில் இப்போது அதற்கான மாற்று உபாயங்களை கையாள முனைப்புடன் செயற்படுவதாக தெரியவந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பெருமளவில் இராணுவக் குவிப்பு நடவடிக்கையை மேற்கொண்டுவரும் அரசு - அங்கு திடீரென கடுமையான முறையில் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளமையானது போர்நிறுத்த மற்றும் சமாதானச் சூழலுக்கு முற்றிலும் முரணான ஒன்றாகவும் அதற்கு அச்சுறுத்தல் விடுப்பதாகவுமே உள்ளது.

அரசு மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளுக்கு அது ஆயிரம் காரணங்களைக் கூறினாலும் அதனை அங்குள்ள மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இராணுவ சுற்றிவளைப்பு என்பது மக்களை இம்சைப்படுத்தும் அவர்களை அவமதிக்கும் அல்லது பீதியூட்டும் நடவடிக்கையாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

இதேவேளை, தங்கள் செயற்பாடுகளை நியாயப்படுத்தவும் மேலும் தீவிரப்படுத்தவும் விடுதலைப்புலிகளை சீண்டும் நோக்குடன் கூடிய திட்டமிட்ட பொய்ப்பிரசார நடவடிக்கைகளை பன்முகப்பட்ட வகையில் அரச மற்றும் அரசசார்பு ஊடகங்களூடாக மேற்கொள்ளவும் தொடங்கியுள்ளது.

இது ஒரு பலவீனமான அரசின் கையாலாகாத் தனத்தின் எதிரொலியென்றே அரசியல் நோக்கர்கள் வர்ணிக்கத் தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமாதான முயற்சிகளில் அக்கறையுடன் ஈடுபடுவதாக பிரசாரம் செய்து சர்வதேச சமூகத்தை நம்பவைக்கப் பிரயத்தனம் செய்யும் அரசு சமாதானத்தினை முன்னெடுக்கும் பங்காளிகளான தமிழர் தரப்பின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப் புலிகளைப் பற்றி பொய்யான புரளி கிளப்பும் நோக்கிலானதுமான கற்பிதம் செய்யப்பட்ட செய்திகளை பிரசாரம் செய்வது கேலிக்குரிய விடயமேயாகும்.

கெட்டிக்காரன் புழுகு எட்டேநாள் தான் என்பதை பொய்ப் பிரசாரகர்கள் புரிந்து கொள்வது நல்லது.

# நாடும் நடப்பும்




# மாவீரரின் பெற்றோர்கள் என்றுமே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்

**யாழ்.நல்லூர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன்**

ாங்கள் இந்த மண்ணில் பெருமை அடைந்திட, எங்களைப் பெருமை கொள்ள வைத்தவர்களான மாவீரர்களை, எமக்குத் தந்த பெற்றோரை இந்த ஒரு நாள மட்டுமல்ல. வருடம் முழுவதும், காலங்கள் முழுவதும் கௌரவிக்கவும், அவர்களின் நலன்களில் கவனமெடுக்கவும் காத்திருக்கிறோம்.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்.வீரசிங்கம் மணடபத்தில் தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், நடைபெற்ற மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பின் போது கலந்து பேசுகையில் யாழ். நலலூர் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் செழியன் தெரிவித்தார்.

ஒன்றியத் தலைவர் சேரன் சிவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் செழியன் தொடர்ந்து பேசுகையில்.-

தமிழினத்தின் விடிவுக்கான மீட்புப் போரில் இதுவரை உயிரிழந்துள்ள 17 ஆயிரத்து எண்ணூறு மாவீரர்களின் பெற்றோர்களையும், எமது அமைப்புப் பேணுவதற்கான வேலைத் திட்டங்களையும் வகுத்துள்ளது.

தமிழினத்தின் முழுமையான விடிவுககுப் பின்பு மாவீரர்களின் குடும்பங்களை எந்த விததநில் பேணவேண்டும் என்பதை எமது தேசியத் தலைவர் வகுத்து வைத்துள்ளாரெனவும் அவர் தெரிவித்தார்.

தலைமையுரையில் சேரன் சிவராசா -

எமது போராட்ட வரலாற்றிலே பூ விதைகளாகத் தூவல்பட்ட மலர்களைப் பெற்றெடுத்த பெற்றோர்களைக் கௌரவிப்பதில் இந்த மண்ணும் பெருமை அடைகிறது.

புறநானூறு பாடல்களில் சித்தரிக்கப்பட்ட காட்சிகளை நமது மண்ணில் நிகழ்த்தியவர்கள் போராளிகள்.

இந்த மாவீரர்களால் புதுப்பரணி பாடுகின்ற காலங்கள் பரிணமித்துக் கொண்டிருக்கிறதென தெரிவித்தார்.

முச்சக்கர ஊர்திகள் சங்கச் செயலாளர மு.தர்மகுலம பேசுகையில் -

எம்து மண்ணில் நடைபெற்றது அடக்கு ஒடுக்கு முறைக்கான இன விடுதலைப் போர் ஒரு இனம் இன்னொரு இனத்தை அடக்கி ஒடுக்கிவாழ எத்தனிப்பதை எந்த ஒரு இனமும் தன் மானத்துடன் ஏற்றுக்கொள்ளாது.

எங்களை நாம் நிர்வகிப்போம், எங்களை நாம் காப்போம், எங்களை நாம் கட்டி எழுப்புவோம் என்ற தேசியத் தலைவரின் வழிகாட்டிலில் மைந்தர்களாக உள்ளவர்கள் மாவீரர்கள் எனத் தெரிவித்தார்.

(206)

# மாவீரர் தினத்தன்று பிறக்கும் குழந்தைகளுக்கு வங்கிக் கணக்கு

தமிழீழ தேசத்தின் விடுதலைக்காய் தங்களை ஆகுதியாக்கிக் கொண்ட மாவீரர்களின் நினைவாக வருடம் தோறும் எழுச்சிபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்ற தமிழீழ மாவீரர் நாளான - நவம்பர் 27 ஆம் திகதியன்று பிறக்கின்ற குழந்தைகளுக்குக் கிராமிய அபிவிருத்தி வங்கி புதிய கணக்கொன்றை ஆரம்பிக்க உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றது.

தமிழீழத் தேசத்தில் வீரத்திருநாளான அன்றைய தினம் தமிழீழத் தாயகப் பிரதேசத்தில் பிறக்கின்ற சகல குழந்தைகளுக்கும் கிராமிய அபிவிருத்தி வங்கி 500 ரூபாவை செலுத்தி, கணக்கை ஆரம்பிக்கவுள்ளது. எனவே, குழந்தைகளின் பெற்றோர்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வவுனியா மாவட்டத்தில் உள்ளவர்கள் கனகராயன் குளத்தில் அமைந்துள்ள கிராமிய அபிவிருத்தி வங்கியுடனும், திருகோணமலை மாவட்டத்தில் உள்வர்கள் மூதூரில் உள்ள வங்கியுடனும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளவர்கள் கரடியனாறு பிரதேச வங்கியுடனும், யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் கிளிநொச்சி வங்கியுடனும், மன்னார் மாவட்டத்தில் உள்ளவர்கள் ஆண்டான்குளம் பிரதேச வங்கியுடனும் தொடர்புகொள்ளலாம். மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ளவர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் அமைந்துள்ள வங்கியுடனும் தொடர்புகொள்ளுமாறும் கிராமிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# நான்கு தூக்குக் கயிறுகள் மலேசியாவிலிருந்து இறக்குமதி

(கொழும்பு)

மரண தண்டனை முறையை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரும் பொருட்டு, தூக்கில் தொங்க விடுவதற்கான தூக்குக் கயிறுகள் நான்கை மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான ஒப்பந்த விலை தற்போது கோரப்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரமளவில் இந்தத் தூக்குக்கயிறுகள் நான்கும் இறக்குமதி செய்யப்படும் எனவும் நிதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இறக்குமதி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள தூக்குக் கயிறு ஒன்றின் விலை சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவாகும். இந்தத் தூக்குக் கயிறு, நான்கு மீற்றர் நீளமுடையது.

கடந்த 30 வருடகாலமாக இலங்கையில் மரண தண்டனை நிறைவேற்றப்படாமையால், தற்போது தூக் கில் தொங்கவிடப்பட்டு மரண தண்டனையை நிறைவேற்றும் தூக்குக்கயிறு பழுதடைந்த நிலையில் இருப்பதாகச் சிறைச்சாலை ஆணையாளர் ரூபா மன்சூர் தெரிவித்தார்.

தறபோது கைவசமுள்ள தூக்குக் கயிறு - பெல்ஜியத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதென்றும், ஒன்றின் பெறுமதி ரூபா 95 ஆயிரம் எனவும் அவர் தெரிவித்தார்.

மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள நான்கு தூக்கயிறுகளுக்கும் சுமார் ஆறுலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது. இந்தக் கயிறுகளில் இரண்டு வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும், மற்றைய இரண்டும் போகம்பரைச் சிறைச்சாலைக்கும் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(தே)

# வட்டக்கச்சி பிரதேசத்தில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி அரசியற்துறைப் பிரதேசத்துக்குட்பட்ட மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு - கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இராமநாதபுரம் - கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக இருந்து மங்கள வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு, பாடசாலை நுழைவாயில் மாவீரர் பெற்றோர்களுக்கு மலர் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபனும், தமிழீழ தேசியக் கொடியை குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கோபாலும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து மாவீரர் பெற்றோர் விழா மண்டபத்திற்கு அழைத்துவரப்பட்டனர். இந்த நிகழ்வின் ஈகச் சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி கோபி ஏற்றிவைக்க மாவீரரின் உருவப் படத்திற்கான மலர் மாலையை கிட்டு பீரங்கிப் படைத் தளபதி பவநிதி, வட்டக்கச்சி பிரதேச காவற்துறைப் பொறுப்பாளர் கிங்ஸ்லிதாஸ் ஆகியோர் அணிவித்தனர். அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பொன்னுத்துரை தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் தலைமையுரையை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பொன்னுத்துரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவிகளின் நடனம் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் வரவேற்புரையை இராமநாதபுரம் மகாவித்தியாலய ஆசிரியர் ஸ்ரீ கௌரி நிகழ்த்தினார். சிறப்புரையை குட்டிசிறி மோட்டார் படையணியின் சிறப்புத்தளபதி கோபால், சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த தளபதிகளில் ஒருவரான அமுதாப் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனை தொடர்ந்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படை அணியின் கவியரங்கமும், தூயவன் கல்லூரி போராளிகளான பைங்கதிர், செந்நிலா ஆகியோரின் கவிதைகளும் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் மாவீரர் பெற்றோர்களுக்கு மதிய போசனம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் போராளிகளும், தளபதிகளும், தேசிய எழுச்சிப் பேரவையினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(இ) (9)

# முகமாலை, பளைப் பகுதிகளில் மாவீரர்நாள் பதாகைகள்!

(பளை)

மாவீரர் நாளையொட்டி பளை நகரப் பகுதியில் பொதுஸ்தாபனங்கள், கடைகள், அரசியற்துறைப் பணிமனைகள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் அலுவலகங்கள் பளை முகமாலைச் சோதனைச் சாவடிப் பகுதிகள் எங்கும் சிவப்பு மஞ்சள் நிறக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் ஏ 9 வீதிகளில் மாவீரர் நாள் பதாகைகள் ஆங்காங்கு நாட்டப்பட்டுள்ளதுடன், முக்கிய சந்திகளில் மாவீரர் நாள் வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு நுழையும் முகமாலை நுழைவாயிலில் 'மாவீரர் நாள் 27' பெரிய வளைவு ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

மாவீரர் நாளையொட்டி இந்தப் பகுதி அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பொது ஸ்தாபனங்கள் பாடசாலைகளின் சுற்றுப்புறங்களும, வீதிகளும் சிரமதானம் மூலம துப்புரவு செய்யும் பணிகளும் நடைபெற்றுவருகின்றன. (21)



வன்னிப் பதிவுகள்

# வவுனிக்குளம் பிரதேசத்தில் வான் பாயும் 10 குளங்கள்!

(கிளிநொச்சி)

பாண்டியன் குளம், துணுக்காய் பிரதேசங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால், வவுனிக்குள நீர்பாசனத் திணைக்களத்துக்குட்பட்ட குளங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இதில் வவுனிக்குளம் 24 அடி 4 அங்குலமும், மருதன்குளம் 8 அடி 11 அங்குலமும், முருகண்டிக் குளம் 9 அடி 5 அங்குலமும், தேறாங்கண்டல் குளம் 9 அடி 5 அங்குலமும், கொல்லவிளாங்குளம் 10 அடி 2 அங்குலமும், ஐயங்கன் குளம் 12 அடி 4 அங்குலமும், அம்பலப் பெருமாள்குளம் 9 அடி 3 அங்குலமும், கோட்டைகட்டிய குளம் 5 அடி 3 அங்குலமும், தென்னியன் குளம் 10 அடி 3 அங்குலமும், கல்விளான்குளம் 10 அடி 4 அங்குலமும், மல்லாவிக் குளம் 9 அடி 11 அங்குலம், பனங்காமம் குளம் 8 அடி 6 அங்குலமுமாக நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

இந்தக் குளங்களில் வவுனிக்குளம் - மருதங்குளம் 5 அங்குலம், முருகண்டிக்குளம் 5 அங்குலம், தேறாங்கண்டல் குளம் 5 அங்குலம், கொல்லவிளான்குளம் 2 அங்குலம், ஐயங்கன்குளம் 4 அங்குலம், அம்பலப் பெருமாள் குளம் 3 அங்குலம், கோட்டைகட்டிய குளம் 3 அங்குலம், தென்னியன்குளம் 3 அங்குலம் கல்விளான் குளம் 5 அங்குலம் பனங்காமம் குளம் 6 அங்குலமுமாக வான்பாய்கின்றன.

# தேசியத் தலைவரின் பிறந்த தினத்தில் கிளிநொச்சியில் 50 பானைகளில் பொங்கல்

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் ஐம்பதாவது பிறந்த நாளை முன்னிட்டு கிளிநொச்சி நகரில் ஐம்பது பானைகளில் பொங்கல் வைக்கப்படவுள்ளது. இதே வேளை திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தில் விஷேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை பொதுமக்களும் ஆலய பரிபாலன சபையினரும் செய்து வருகின்றனர்.

இதேவேளை வன்னிப் பிரதேசத்தில் தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பொது நிறுவனங்களும் தேசிய எழுச்சிப் பேரவையினரும் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். (122)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை!

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்வந்துள்ளது.

இந்தப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து, வறிய மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் தூரநோக்குடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பட்டதாரிகள், தொண்டர் ஆசிரியர்களுக்கு உரிய கொடுப்பனவுகளை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமித்து, அவர்களுக்கு மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் கொடுப்பனவுகளை வழங்கிவருகிறது.

இந்தத் திட்டம் தமிழீழ மாணவர் அமைப்பினரின் முன்னிலைப் படுத்தலுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் 22 பட்டதாரிகள் பயன்பெற்று வருகின்றனர். அத்துடன் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் இந்தத் திட்டம் உந்து சக்தியாக அமைந்துள்ளது.

# கிளிநொச்சி - சாந்தபுரம் கிராமத்தில் நான்காயிரம் பனம்விதை நடுகை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - சாந்தபுரம் கிராமத்தில் மரநடுகை தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் கடந்த வியாழக்கிழமை 4 ஆயிரம் பனை விதைகள் நடப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மதியுரையக திட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி மனோகரன், பத்திரிகையாளர் எரிக், மன்னார் மாவட்ட மதியுரையக நிறுவனத்தின் இணைப்பாளர் கி.பிரபாகரன், கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் சி.விஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கருத்துரைகள், சிறப்புரைகளைத் தொடர்ந்து, சாந்தபுர பாடசாலை வளவில் பனம் விதைகள் நடப்பட்டன. அத்துடன் கிராம மக்கள் அனைவருக்கும் நடுவதற்கு பனம் விதைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

# மாங்குளம் படைமுகாம் தகர்ப்பின் 14 ஆம் ஆண்டு நினைவுநாள்

மாங்குளம் இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றிகொள்ளப்பட்ட 14 ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்று ஆகும்.

1990 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி முல்லைத்தீவு - துணுக்காய் ஏ - 9 வீதியை இணைக்கும் மாங்குளம் சந்தியை அண்டிய பகுதிகளில் உள்ள அரச கட்டடங்களை உள்ளடக்கி, பாரிய படைத் தளமாககொண்டு நிலை கொண்டிருந்த இராணுவ முகாம், தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொள்ளப்பட்டது.

இந்த இராணுவமுகாம் தாக்குதலின் போது 2 ஆவது கரும்புலித் தாக்குதலை நடத்தி, கரும்புலி லெப்டினன் கேணல் போர்க் வீரகாவியமானமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சமாதானம் என்ற பெயரில் படுகொலைகள்

## தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம்

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சமாதானம் என்ற பெயரில் படுகொலைகள் இடம்பெறுகின்றன என தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சிப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு நினைவுரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

மாவீரர் தினத்தைக் கொண்டாடும் வேளையில் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலே சமாதானம் நிலவுகின்றது. அடுத்தடுத்த மாவட்டங்களிலே இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலே சமாதானம் என்ற போர்வையிலே படுகொலைகள் நடக்கின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பிள்ளைகளை இழந்த உறவுகளுக்கு ஒருபக்கம் வேதனை இருக்கும் ஆனால் போராட்டத்தின்பால் நாங்கள்பட்ட வேதனைகள், துன்பங்கள், துயரங்கள் சொல்லில் அடங்காதவை.

இன்றைய சமாதானத்தில் நாங்களோ, அல்லது தமிழீழ மக்களோ எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாத சூழலுக்குள் தள்ளப்பட்டு இருக்கின்றோம். இன்றுவரையும் இந்தச் சமாதானம் எமக்கு எதையும் கொண்டுவந்து தரவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இந்த அற்பசொற்ப தேவைகளுக்கோ அல்லது சலுகைகளுக்காகவோ இந்தப் போராட்டம் தொடங்கப்படவில்லை. இந்தப் போராளிகள் போராடவும் இல்லை என்பதை எல்லோரும் நன்றாக உணரவேண்டும். இந்த உலக உயிர்களில் மிகப் பெறுமதியானது மனித உயிர் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த மனித உயிர் வாழத்துடிக்கின்றவேளையில் ஆக்கிரமிப்பாளர்கள் அநியாயமான முறையில் அழித்துக்கொள்கின்றனர். இவ்வாறான அடக்குமுறைகளுக்கு எதிராக எழுந்துநின்று வீரகளமாடி விதையானவர்கள்தான் இந்தப் புனிதர்களான மாவீரர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி புனர்வாழ்வுக் கழகத்தினால் 50 பயனாளிகளுக்கு பழமரங்கள் வழங்கல்

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் போரூட் நிறுவன நிதியுதவியுடன் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன், 50 பயனாளிகளுக்கு பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை காலை 11 மணியளவில் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன திட்ட இணைப்பாளர் வே. பிரபாகரனால் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

ஒரு பயனாளிக்கு 2, பலாக் கன்றுகள், 2 மாங்கன்றுகள், 2 தேசிக் கன்றுகள், 5 தென்னங் கன்றுகள் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டன. (9)

# சமாதானத்துக்கான...

(10 ஆம் பக்க தொடர்ச்சி)

கொண்ருக்கின்றதை உணரமுடிகின்றது.

சமாதானத்துக்கன போர் முழக்கம் மாற்றப்பட்டு, போருக்கான சமாதான முழக்கமாக விளங்குகிறது. இதன் மூலம் தெரிவது இராணுவம் தெரிவான உளவு யுத்தத்தையும், அது சார்ந்த நிழல் யுத்தத்தையும் மேற்கொண்டு வருகின்றது. பாதுகாப்பற்ற விதத்தில் நிகழும் யுத்தங்கள் எந்தத் தரப்பையும் பாதுகாக்காது என்பதையே வெளிப்படுத்தி வருகின்றது.

இத்தகைய சம்பவத்தையும் ஆர்மிரேஜ் விடுதலைப் புலிகள் மீது போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காரணம் அவர் அமெரிக்காவில் இருந்து அறிக்கை விடுவது தான் தவறான முடிவுகளுக்கு காரணமாகிறது. கொழும்பிலிருந்து ஒரு தெளிவான முடிவை எடுக்க முடியாத நிலை காணப்படும் போது, அமெரிக்காவிலிருந்து தெளிவான அறிக்கை விடுவது கடினம். அப்படியாயின் அத்தகைய தவறான கணக்குகளை அமெரிக்கர் நிறுத்த வேண்டும். தனித்து ஒரு தரப்பின் மீது குற்றச்சாட்டைப் போடுவதை நிறுத்திவிட்டு எல்லாத் தரப்பினது நடவடிக்கையை கருத்திற்கொண்டு அறிக்கைகளை, தயாரிப்பது பொருத்தமானது.

எனவே அமெரிக்க ராஜாங்கப் பிரதிச் செயலாளரின் கண்டனங்களும் அறிக்கைகளும் இலங்கை அரசாங்கத் தரப்பை திருப்திப்படுத்துவதற்காகவே அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளை போருக்குள் நுழையவிடாது தடுக்கலாம் ஆனால், தமிழர் தரப்பில் சமாதான காலம் எதனையும் இதுவரை ஏற்படுத்தவில்லை. பாதுகாப்பைக் கூட வழங்கவில்லை. என்றுமே சிங்கள இராணுவம் போர் நடவடிக்கைக்கு உரித்தான வேலைகளை மேற்கொள்வதுடன், தமிழர்களையும் அந்தப் பிரதேசத்தையும் அரசே கைவிட்டுள்ளது துர்ப்பாக்கிய நிலை இலங்கை அரசின் போக்கை தெளிவாக விளங்க வைக்கின்றது. இதனால் ஆர்மிரேஜின் வெளிப்படுத்துகை யதார்த்தத்தை உணர்ந்து கொள்ளாத அம்சம் என்று கூறுவதைவிட எமது நலன்களுக்கான எல்லாவற்றையும் பயன்படுத்துகின்ற போக்கென கூறிக்கொள்ளலாம்.

# வத்திராயன் - கட்டைக்காடு வீதி பொது மக்களால் சிரமதானம்!

(வடமராட்சி கிழக்கு)

கடந்த சில நாட்களாகப் பெய்த கடும்மழை காரணமாக வத்திராயன் தொடக்கம் கட்டைக்காடு வரையான கடற்கரை வீதி முற்றாகச் சேதமடைந்து வாகனப் போக்குவரவு நடைபெறமுடியாத நிலையில் காணப்பட்டது.

உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி கிராமங்களைச் சேர்ந்த சுமார் 500 பொதுமக்கள் வீதியிலுள்ள குழிகளை, மழைநீர் ஊடறுத்துப் பாயும் வாய்க்கால்களை சிரமதான மூலம் விதியைச் செப்பனிட்டு வாகனங்கள் பிரயாணம் செய்யக்கூடியதாகத் திருத்தி அமைத்துள்ளனர்.

(12)

## யாழ். அரசாங்க அதிபர்
## செ. பத்மநாதன்
### அவர்கள் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கிறார்

**INTRODUCING**

**அறிமுகப்படுத்துகின்றோம்**

QUALITY

TASTY

PURITY

# Swiss Mineral

*Water*

**Bottled under hygienic conditions according to the W.H.O.standard.**

# சுவிஸ் மினரல் தண்ணீர்

தரமானது

சுவையானது

சுத்தமானது

அனைத்து மினரல்களும் சர்வதேச தரத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள சுத்தமான தண்ணீர்

*500 ml 1500 ml*
*750 ml 3 Ltr*
*1000 ml 5 Ltr*

## Eau Minerale Naturelle
## Naturliches Mineralwasser

சுவிஸ் மினரல் வாங்குங்கள் பல லட்சம் பெறுமதியான பரிசில்களை வெல்லுங்கள்.



## விழா நடைபெறும்....

காலம்:- 24.11.2004 - புதன்கிழமை - பி.ப.5.00 மணி.

இடம்:- இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர்.

மேலதிக விபரங்களுக்கு -
Swiss Mineral
231, Temple Road,
Nallur.
T.P. 077 6244597

(C/3396)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்கள் தெரிவாகினர்!

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் எதிரிசூரிய, அமீர் இஸ்மாயில், முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஈ.டி.பி.ஈ ஆனந்தராஜா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நியமிப்பதற்காக நேற்றுமுன்தினம் கூடிய அரசியலமைப்புச் சபையிலேயே இவர்கள் புதிய உறுப்பினர்களாக சிபார்சு செய்யப்பட்டனர்.

சபாநாயகர் தலைமையில் கூடிய அரசியலமைப்புச்சபையில் உறுப்பினர்களாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் பங்குபற்றினர்.

இந்தப் பெயர்ப்பட்டியல் விரைவில் ஜனாதிபதியின் பார்வைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

### சமாதானப் பேச்சுக்கு எதிராக

## ஒரு மில்லியன் தபால் அட்டைகளை ஜனாதிபதிக்கு அனுப்புவதற்கு திட்டம்!

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபையை அடிப்படையாக வைத்து அரசாங்கம் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடாது எனத் தெரிவித்து 1 மில்லியன் தபாலட்டைகளை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிவைக்க அனைத்துப் பல்கலைக் கழக பிக்குமார் ஒன்றியம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த அனைத்துப் பல்கலைக் கழக பிக்குமார் ஒன்றிய அமைப்பாளர் லுணுகம்வீர கல்யாரன்சி தேரர் -

இடைக்கால நிர்வாகசபையை அடிப்படையாக வைத்து அரசாங்கம் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக் கூடாது எனத் தெரிவித்து தபாலட்டைகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்குமாறு நாட்டு மக்களுக்கு பகிரங்கமான வேண்டுகோள் ஒன்றை எமது ஒன்றியம் நாளை விடுக்கவுள்ளது.

எமது இந்தச் செயற்பாடானது இந்த நாட்டிலுள்ள ஒரு மில்லியன் மக்கள் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதை விரும்பவில்லை என்பதை அரசாங்கத்துக்குத் தெளிவுபடுத்தும.

விடுதலைப்புலிகள் மீது இரக்கம் காட்டுகின்ற நோர்வே போன்ற சர்வதேச நாடுகளின் வற்புறுத்தலுக்கமைய அரசாங்கம் ஒருபோதும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கக் கூடாது. இடைக் கால நிர்வாகசபை அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும்படி அரசாங்கத்திற்கு நோர்வே அழுத்தம் கொடுத்து வருகிறது.

விடுதலைப் புலிகள் அரசியற் படுகொலைகளைப் புரிந்து வருகிறார்கள் அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் யுத்தநிறுத்தத்தை மீறியுள்ளார்கள். ஆனாலும் நோர்வே தரப்பு வெறுமனே கைகளைக் கட்டிக்கொண்டு மௌனம் சாதித்து வருகிறது.

புலிகள் இன்றும் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து தமது ஆயுத பலத்தை அதிகரிக்கிறார்கள். இவற்றை நிறுத்துவதற்கு நோர்வே அனுசரணையாளர்கள் என்ன செய்தார்கள்? தற்போது நோர்வேத் தரப்பு விடுதலைப் புலிகளின் சர்வதேச முகவர்களாக மாறி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்கள்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைகால நிர்வாகசபை என்பதில் ஒன்றும் இல்லை. இது நாட்டை இரண்டாகப் பிரிக்கும் உத்தியே. நாட்டில் உள்ளது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் அந்த அரசாங்கம் நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க வேண்டும். மாறாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்து நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்து விடக்கூடாது.

அண்மையில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் 60 சதவீதமான மக்கள் இடைக்கால நிர்வாகசபையின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதை விரும்பவில்லை. இந்நிலையில் நோர்வே அனுசரணையாளர்கள் சமாதானப் பேச்சுக்களை இடைக்கால நிர்வாக சபை அடிப்படையில் ஆரம்பிக்க வேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்துவதை வன்மையாக்க கண்டிக்கிறோம் எனத் தெரிவித்தார்.

### நீதிபதிகளின் பாதுகாப்புக்கு

## விசேட பொலிஸ் பிரிவு நேற்று அங்குரார்ப்பனம்!

கொழும்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நீதிபதிகள் பாதுகாப்புப் பிரிவு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்புப் பிரிவில் விசேட பயிற்சி பெற்ற 140 பொலிஸார் அங்கம் வகிக்கின்றனர்.

கொழும்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி, கொழும்பு பிரதம நீதிவான் மற்றும் நீர்கொழும்பு நீதிவான் ஆகியோருக்கு தலா இரு மெய்ப்பாதுகாவலர்களும், பாதுகாபபு அணி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களது வீடுகளுக்கு பொலிஸ பாதுகாப்பு வழங்கப்பட வுள்ளது.

ஏனைய நீதிபதிகளுக்கு இத்தகைய பாதுகாப்பு எதிர்வரும் இருவாரங்களுக்குள் வழங்கப்படுமெனத் தெரிவித்துள்ள உயர்நீதிமன்ற நீதிபதியும், உயர்நீதிமன்ற நீதிபதிகள் சம்மேளனச் செயலாளருமான றோகன பெரேரா - தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நீதிபதிகள் பாதுகாப்புப் பிரிவு அனைத்து நீதிபதிளுக்கும் பலத்த பாதுகாப்பை வழங்கும் எனத் தெரிவித்தார்.

மேலும் - இந்த நீதிபதிகள் பாதுகாப்புப்பிரிவை உருவாக்குவது தொடர்பாக சுட்டுக்கொல்லப்பட்ட கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேட்டிய, பொலிஸ் அதிகாரிகளுடன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பேச்சுக்களை நடத்தியதாகவும் இந்தப் பாதுகாப்பு பிரிவினை அமைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே சரத் அம்பேபிட்டிய பரிதாபகரமாக உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## புலிகளின் கட்டளைத் தளபதிகள் மட்டக்களப்பு, திருமலை திரும்பினர்!

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான கேணல் பானு, கேணல் சொர்ணம், கேணல் பால்ராஜ் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் உள்ளிட்ட 14 போராளிகள் தரைமார்க்கமாக திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு பயணமானதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடியூடாக நேற்றுக் காலை 11 மணியளவில் புலிகளின் தளபதிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்குப் பயணமாகினர்.

இவர்களில் எட்டுப் பேர் திருகோணமலை மாவட்டத்துக்கும் ஏனைய ஆறு பேரும் மட்டக்களப்புக்கும் பயணமாகினர்.

கடந்த 12 ஆம் திகதி தலைமைப்பீடத்துடன் முக்கிய ஆலோசனைகளுக்காக திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணமும், மட்டக்களப்பு - அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானுவும் கிளிநொச்சிக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மருதூர்கனி காலமானார்!

(கொழும்பு)

தேசிய ஐக்கிய முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல எழுத்தாளருமான எ.எல்.எம்.ஹனிபா என்ற இயற பெயரை உடைய மருதூர்கனி நேற்று காலமானார்.

சுகவீனம் அடைந்திருந்த இவர் நேற்று பகல் 10 மணிக்கு காலமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக உறுப்பினரான இவர், சாகித்திய மண்டல பரிசு பெற்றவர். (01)

## தகவல் கொடுத்தால் பல லட்சம் சன்மானம்

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டியவை கொலை செய்தவர்களைக் கைதுசெய்வதற்கு அவர்கள் தொடர்பான விபரங்களை வழங்குவோருக்கு பத்து இலட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கொலையில் ஈடுபட்டனர் எனத் தெரிக்கப்படும் சந்தேக நபர்கள் நால்வர் 253-0882 என்ற இலக்கமுடைய வாகனத்தில் வந்தே இந்தக் கொலையை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பான விபரங்களை 2421112, 2662321 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கோ அல்லது 119 என்ற அவசர பொலிஸ் சேவைக்கோ தெரியப்படுத்தலாமெனவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (தே)

## நீதித்துறையை பாதுகாப்பது நாடாளுமன்றத்தின் கடமை!

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

இலங்கையிலுள்ள நீதித்துறை அலுவலர்களுக்கான பாதுகாப்பை வழங்குவது நாடாளுமன்றத்தின் கடமையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாடாளுமன்றமானது நீதித்துறையை விட அதிகாரம் கூடியதாகும் எனவே நீதித்துறை சார்ந்த ஊழியர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அதற்குள்ளது.

அத்துடன் இது தொடர்பாக சபாநாயகர் உடனடியாகவே அனைத்துக்கட்சித் தலைவர்களை அழைத்து கூட்டமொன்றை நடத்தவேண்டும்.

கடந்தவாரம் உயர்நீதிமன்ற நீதிபதி கொல்லப்பட்டமையானது நாட்டில் நீதித்துறை முற்றமுழுவதுமாகவே செயலிழந்துவிட்டதையே எடுத்துக் காட்டுவதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் கைதான இளைஞர் நேற்று விடுதலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று முன்தினம் பொலிஸ், இராணுவம் நடத்திய தேடுதல் நடவடிக்கையின் போது கைதான இளைஞர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

மயிலம்பாவெளி விபுலானந்தபுரத்தைச் சேர்ந்த கணேசமூர்த்தி சசிகரன் (வயது 19) என்ற இந்த இளைஞர் ஜி.வி. வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள தேநீர் கடையொன்றில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இவர் மீது எத்தகைய குற்றச் சாட்டுகளும் சுமத்தப்படாத நிலையில் பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக்கொண்ட மேலதிக நீதிபதி ஏ.எச்.எம்.அஜ்மீர் இந்த இளைஞரை விடுதலை செய்தார்.

## பாரிய யுத்தம் ஒன்றுக்கு...

1972 என்.எம்.பெரேரா முன்மொழிந்த சிறப்பான திட்டம் காரணமாக பனங்கள் உற்பத்தி வடக்கில் பாரிய வெற்றியைப் பெற்றது. இதுபின்னர் தென்னிலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வடக்கு - கிழக்கில் இடைக் காலத் தன்னாட்சி வரைபை அடிப்படையாகக் கொண்டு தீர்வு காணப்படுவது அவசியமாகும். இல்லையேல் யுத்தம் ஒன்று ஏற்படுவதை தடுக்கமுடியாமல் போய்விடும்.

அதன்மூலம் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தமிழீழம் ஒன்று உருவாக்கப் படுவதை எவராலும் தடுக்க முடியாது போய்விடும் என்றும் சிவநாதன் கிஷோர் குறிப்பிட்டார்.

## ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை..

கள் ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கேட்டிருந்தார்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.கவின் ஆதரவைக்கோரிய அதே வேளை - அந்தக் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளும் கட்சிக்கு இழுத்து அவர்களுக்கு பதவிகளைக் கொடுக்க முற்படுவதானது எதிர்க்கட்சியைப் பெரிதும் சீற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது.

ஏற்கனவே - றோகித போகொல்லாம ஆளும் கட்சிக்கு மாறிய நிலையில் - மேலும் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணையப்போவதாக அமைச்சர் ஒருவர் கருத்து வெளியிட்டிருந்ததாகவும் -

இதனை நிராகரித்திருக்கும் எதிர்க்கட்சித் தரப்பு, அரசாங்கத்தின் இந்தப் போக்குக்காரணமாக சமாதான முயற்சி உள்ளிட்ட விடயங்களில் அர சாங்கத்துடன் இணங்கிப்போவதென்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பை மாற்றியமைப்பதும், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தம்வசம் இழுப்பதுமே ஜனாதிபதி சந்திரிகாவின் ஒரே நோக்கமாக இருக்கின்ற நிலையில் - அரசாங்கத்துடன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இறங்கிச் செல்வது என்பது முடியாத காரியம் என்று ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் உள்துறை அமைச்சராக இருந்த ஜோன் அமரதுங்க குற்றங்களைத் தடுப்பதற்காக மரணதண்டனையை மீண்டும் அமுல செய்ய வேண்டும் என்று தனி நபர் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர முயற்சித்தபோதும் அதற்கு ஜனாதிபதி ஆதரவு வழங்கவில்லை. அதற்கு அவர் ஆதரவு வழங்கியிருந்தால் எவ்வளவோ குற்றங்கள் குறைந்திருக்கும்.

அரசாங்கம் உலக சந்தையில் எரிபொருள் விலைகள் உயர்வு காரணமாக நாட்டில் எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்து வருகின்றது.

இன்று உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் குறைந்துள்ளன. எனவே அரசாங்கம் எரிபொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டும்.

ஆனால் இதுவரை அவ்வாறான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில் அந்த நாடு இன்று எரிபொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

இந்த நிலையில் அரசாங்கம் உலகசந்தையின் விலையுயர்வுக்கு ஏற்ப எரிபொருட்களின் விலையை உயர்த்தவில்லை என்பது தெளிவாகியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க -

அரசாங்கம் வெளிநாட்டு உதவிகளை மையமாகக் கொண்டு வரவு செலவுத்திட்டத்தைத் தயாரிக்கவில்லை எனக் கூறுகின்ற அதேநேரம், நிதி அமைச்சின் செயலர் பி.பி.ஜெயசுந்தர வரவு செலவுத்திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்திக்க அரசாங்கம் 900 மில்லியன் ரூபாய்களை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தமை அரசாங்கத்தின் பொய்யான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது எனத் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கு 9 மணிநேர பணி தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி காட்டிய எதிர்ப்புக் காரணமாகவே அதனை அரசாங்கம் விலக்கிக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.